

Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்

# கண்ணோட்டம்

KANNODDAM

කණ්ණෝඩ්ඩම්

வெளியீடு :- 73 | 01 ஜூலை 2016 | விலை ரூபா :- 10.00

# பாதுகாப்புக்கு அவசியமான நிலங்கள் தவிர எஞ்சியவை விடுவிக்கப்படும் – பாதுகாப்பு செயலாளர்

## எவ்வளவு நிலங்கள் பாதுகாப்பு அவசியமானவை – தெளிவாய் இல்லை



வடக்கு- கிழக்கிலுள்ள இராணுவம் 2017க்குள் முற்றாக நீக்கப்படும் எனவும், படையினர் வசமுள்ள தமிழர்களின் காணிகள் அனைத்தும் 2018 க்குள் மக்களுக்கு மீளக் கையளிக்கப்படுமெனவும் வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர ஜெனீவாவில் தெரிவித்ததாக அறிக்கைகள் கூறுகின்றன. வெளி நாட்டமைச்சரின் கருத்துக்கும் பாதுகாப்பு செயலாளர் யாழ்ப்பாணத்தில் பேசிய பேச்சுக்கும் பெரும் இடைவெளி இருப்பது தெரிகிறது.



அது ஊருக்கடி கண்ணே உனக்கல்ல எனும் விகடமொழியின் மறுபக்கம் தான் வெளி நாட்டமைச்சரின் கருத்தா?

வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவம் முற்றாக நீக்கப்படும் என்பது எந்த வகையிலும் நம்பத் தகுந்ததாக இல்லை. வடக்கு கிழக்கி லிருந்து இராணுவம் கணிசமாக குறைக் கப்படும் என கூறுவதுதான் அவரது வாக் குறுதியாக இருப்பின் அதில் ஓரளவுக்

( தொடர்ச்சி 6 ம் பக்கம் )

### தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில்

## மட்டக்களப்பில் 26 ஆவது தியாகிகள் தினம்

ஜூன் 19 அன்று மட்டக்களப்பில் 26 ஆவது தியாகிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பு மத்திய வீதியில் அமைந்துள்ள போக்கஸ் மண்டபத்தில் தோழர் மதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வை உயிர்நீத்த தோழர் குணம், தோழர் காளி ஆகிய இருவரதும் தாயார் அ.கனகம்மா குத்துவிளக்கேற்றி தோழர் பத்மநாபாவின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து ஆரம்பித்து வைத்தார். உயிரிழந்த தோழர்கள், சக இயக்கப் போராளிகள், பொதுமக்களை நினைவுகூர்ந்து 2 நிமிடம் அனைவரும் அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து பௌத்த, இஸ்லாமிய மதகுருமார்கள் ஆசியுரைகளை வழங்கினர்.



மேற்படி நிகழ்வில் வணக்கத்துக்குரிய வட்டரங்க விஜித்திர தேரர்- தலைவர், ஜாதிக பல சேனா, மௌலவி முகமட் சலீம் - உப அதிபர், நிசார் மௌலானா - தலைவர், முஸ்லிம் முற்போக்கு முன்னணி, மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் அருண் தம்பிமுத்து, ஈபிடிபி சார்பில் தோழர் சிவா, புளொட் சார்பில் தோழர் நிமலன், தோழர் சங்கர் - அம்பாறை, தோழர் மோகன் -யாழ்ப்பாணம், தோழர் சத்தியன்- திருகோணமலை, சித்தி அங்கிள் (சிவராசா) ஆகியோர் உரையாற்றினர். தோழர் சந்திரன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்

தியாகிகள் தின வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தனது உரையில், தோழர் பத்மநாபா, ஈபிஆர்எல்எவ் இயக்கத்தின் தலைவராக இருந்தபோதும் தனது இயக்கம் மாத்திரம் தான் இருக்க வேண்டும்; அது மட்டும் தான் போராட வேண்டும்; ஏனைய அமைப்புக்களை இல்லாதொழிக்க வேண்டும் என்று எந்தக் கட்டத்திலும் சிந்தித்தது கிடையாது. மாறாக எல்லா இயக்கங்களும் ஒற்றுமையாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரும்பாடுபட்டவர். இந்த நாட்டிலுள்ள அனைத்து இன மக்களினதும் உரிமைகளுக்காக போராடி உயிர்நீத்த உன்னதமான மனிதர் அவர் எனத் தெரிவித்தார்.

## வாக்காளர் பதிவு புலம்பெயர்ந்தவர்களுக்கும் வாய்ப்பு

இலங்கையில் 18 வயதை அடைந்த எவரும் தேர்தல் ஒன்றில் வாக்களிக்கும் தகமையை பெற்றவராகிறார். ஆனால் இவ் வயதை எட்டிய ஒருவர் இலங்கை தேர்தல்கள் ஆணையகத்தில் வாக்காளராக பதிவு செய்துகொண்டாலே அவர் தேர்தல் ஒன்றில் வாக்களிக்கும் உரிமை உடையவராவார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே நாடாளுமன்றத்திற்கான ஆசனங்கள் கணக்கிடப் படுவதனால் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொண்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும் போது பாராளுமன்ற ஆசனங்கள் குறைவடையும். இது மாவட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள், அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 5 இலட்சத்து 39 ஆயிரத்து 641 ஆகும். பதிவு செய்தவர்களில் 24 வாக்காளர்கள் குறைவாக இருந்தமையால் யாழ் மாவட்டத்திற்கான பாராளுமன்ற ஆசனங்கள் 7 இலிருந்து 6 ஆக குறைவடைந்ததாக தேர்தல் திணைக்கள தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

வாக்காளர் இடாப்பில் ஒரு தடவை பெயரை பதிவு செய்தால் தொடர்ச்சியாக குறித்த நபரின் பெயர் வாக்காளர் இடாப்பில் இடம்பெறாது. ஒவ்வொரு வருடமும் பெயர்களை உட்சேர்பதற்காக விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும். பதிவுகளின் போது இறந்தவர்களின் பெயர்கள்

( தொடர்ச்சி 2 ம் பக்கம் பார்க்க )

## அரசியல் தீர்வு : இந்தியாவின் தெளிவான நிலை

“அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தை இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும்” என பல்வேறு தடவைகளும், சில சந்தர்ப்பங்களில் “இலங்கை அரசு 13வது திருத்தத்துக்கும் அப்பாற் சென்று தமிழர்களுக்கு அரசியற் தீர்வு வழங்க வேண்டும்” என்றும் இந்தியா கடந்த காலங்களிற் கூறி வந்தது. இலங்கைத் தமிழ்த் தேசவாதிகளோ “13வது திருத்தம் பயனற்றது” - “ஒன்றுக்கும் உதவாதது” – “அரசியற் தீர்வின் முதற் கட்டமாகக் கூட அது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது”; “ஒற்றையாட்சிக்குள் அரசியற் தீர்வு காண முடியாது – வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் - தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் - சமஷ்டி அமைப்பே உருவாக்கப்பட வேண்டும் - அதை இந்திய அரசு செய்து தர வேண்டும்” என முழங்கி வந்தார்கள் - பல்வேறு சந்தர்ப்பங்களில் தீர்மானங்களும் நிறைவேற்றினார்கள். 2015ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவில் சமஷ்டி அமைப்பு செயற்படுவது பற்றி பேசியதை தமிழ்த் தேசவாதிகள் தமக்கு வசதியாக, ஏதோ! இந்தியப் பிரதமர் இலங்கை அரசை நோக்கி தமிழர்களுக்கு சமஷ்டி அமைப்பை வழங்கும்படி கூறுகிறார் என புரிந்து கொண்டார்கள். அதுபற்றி வடக்கு

( தொடர்ச்சி 5 ம் பக்கம் பார்க்க )

பிரித்தானிய மக்களின் தீர்வு



பக்கம்-04

அரிமன்டு கேள்வி பதில்



பக்கம்-07

தோழர்களை நினைவு கூருவோம்



பக்கம்-07

சிங்களில் பொதுவாதாரு மைம்



பக்கம்-08

26 ஆவது தியாகிகள் தினம்



பக்கம்-09

கண்ணோட்டம்
KANNODDAM
294, கண்டிவீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022



# ஊரெரியும் நெருப்பில் உலைவைக்கும் இனவாதிகள்

ஜெனிவா மனித உரிமைகள் மன்றம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தரும்; யுத்தகாலத்தில் காணாமல் போனவர்களை கண்டுபிடித்துத்தரும்; பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் சிறையிலிருப்போரை எல்லாம் விடுவித்துத் தரும்; அதற்கெல்லாம் மேலாக, இந்த ஜெனிவா மனித உரிமைகள் மாநாடுகள் ராஜபக்ஸாக்களையும், அரச படைத் தளபதிகளையும் தண்டிக்கும் என்றெல்லாம் கடந்த 7 ஆண்டுகளாக நம்ப வைக்கப்பட்ட தமிழர்களுக்கு இப்பொழுது தான் உலக உண்மைகள் சிறிதாகப் புலப்படத் தொடங்கியிருப்பது போல் தெரிகிறது.

தமிழ் கூட்டமைப்பினரும், மற்றைய தமிழ் தேச வாதிகளும், மனித உரிமை மீறல்களை இலாபமாக்கி வேலை செய்யும் அரசு சாரா நிறுவனங்களும், தமிழ் பத்திரிகைகளும் வருடாவருடம் ஜெனிவா திருவிழாவை பிரபல்யப்படுத்தி பதவி, புகழ், பணம் என்பவற்றை தேடிக்கொண்டார்கள் என்பது தமிழர்களுக்கு இப்போது புலப்படத் தொடங்கியிருக்கிறது.

தனக்கு ஆதரவளித்தால் "தருமத்தின் தலைவன்", இல்லையென்றால் "அதர்மத்தின் முகவர்" எனும் வாய்பாடு இங்கு தமிழ் தீவிர வாதத்தின் பாடமாக இருந்து வந்திருக்கிறது. தாங்கள் நினைப்பதற்கெல்லாம் இந்தியா ஆதரவளித்தால் அது "தாய்நாடு" "தொப்புள்கொடி உறவு" இல்லையென்றால் அது "ஆக்கிரமிப்பு நாடு" என்று கூறியதைக் கண்டிருக்கிறோம்.

அதேபோல அமெரிக்கா தங்களுக்கு ஆதரவளித்தால் "மிகப்பெரிய ஜனநாயக நாடு" இல்லையென்றால் அது "ஏகாதிபத்தியம்" என்று கூறுவதையும் பார்க்கிறோம். அவ்வாறே இந்த ஜெனிவா மனித உரிமைகள் அமைப்பும் பார்க்கப்படுகிறது. தாங்கள் எதிர்பார்த்ததெல்லாம் நடக்கும் என நினைத்த போது இந்த ஜெனிவா மன்றம் உலக "நீதியின் தலைவன்" எனக் கூறப்பட்டது. இப்போது, இல்லை! இல்லை!! அது "ஏகாதிபத்தியத்தின் ஏஜன்ட்" என முத்திரை குத்தப்படுகிறது.

சுயநலத்திலிருந்து ஒருவிடயம் சரியானதா, பிழையானதா என்று பார்ப்பதே மோசடித்தனமான ஒன்றாகும். இதற்கு புத்திஜீவித்தனமான விளக்கங்கள் தேவையில்லை. உலக நாடுகளுக்கிடையில் உறவுகள் என்ன அடிப்படை யில் எவ்வெவ்வாறு நிகழுகின்றன -மாறுகின்றன என்பதை புரிந்துகொண்டு தனது சமூகத்தின் நலன்களை முன்வொடுப்பதே சரியான தலைமையின் கடமை.

உலக நாடுகளெல்லாம் ஒத்துழைப்பு வழங்கியபடியால் தான் இலங்கை அரச படைகள் புலிகளை அடித்து முடித்தார்கள் என ஓலமிடும் தமிழ் தேசவாதிகள் அதே உலக நாடுகளிடம் நீதி பெற்றுத் தரும்படி போன போது என்ன அறிவோடு போனார்கள். இது முட்டாள் தனத்தின் வெளிப்பாடா? அல்லது தமிழர்களை முட்டாள்களாவே வைத்திருக்க முயற்சிப்பவர்களின் வித்தையா?

அமெரிக்கா கப்பல் கொண்டுவரும்; தங்களை காப்பாற்றும் என தமிழர்களை அழிவின் விளிம்புவரை கொண்டு சென்றவர்கள் தானே புலிகள். அந்தப் புலிகளால் வளர்த்து விடப்பட்ட - வாழ வைக்கப்பட்டுள்ள தமிழ் தேச வாதிகளும் இதுவரை, ஜெனிவா வரும்! தமிழர்களுக்கு நீதி தரும்! என தமிழர்களை உணர்ச்சியூட்டி முருங்க மரத்தில் உயர உயர ஏற்றிக்கொண்டிருந்தார்கள் இப்போது ஜெனிவா ஏமாற்றுகிறது என்கிறார்கள். இப்போதாவது அவர்கள் நேர்மையான புத்திநிலைக்கு வந்திருக்கிறார்களா என்பது கேள்வியே! ஏனெனில் இப்போதும் அவர்கள், ஜெனிவாவை விடக்கூடாது; தமிழர்களுக்கு வேறு வழியில்லை; விட்டால் சிங்கள இனவாதிகளுக்கு மேலும் வாய்ப்பாகப் போய்விடும் என்கிறார்கள். இங்கு வருடா வருடம் ஜெனிவா மாநாட்டுத் திருவிழாவை மையமாக வைத்து தமிழ் தேச வாதிகளும், சிங்கள பேரின தேச வாதிகளும் ஒருவருக்கொருவர் உதவுகின்றார்கள். இந்த இரு இனவாதிகளுக்கும் பரந்துபட்ட சாதாரண சிங்கள- தமிழ் மக்கள் ஒருவரையொருவர் நம்பாதிருக்க வேண்டும் என்பதே குறிக்கோள்.

தினமெல்லாம் சாவீடென்றால் திருவிழா பிணந்தின்னிகளுக்கே!

# ஆபத்தில் வங்காலை பறவைகள் சரணாலயம்






நம்மில் பலருக்கும் அரசியல் நகர்வுகள் மீது இருக்கின்ற ஆர்வமானது அதன் பின்னாலுள்ள வேறுபல அழிவுத் திட்டங்களை இனம் காண்பதற்கான அக்கறையாக உருவாகுவதில்லை. பூர்வீக வாழ்விடம் என்பதனை அரசியல் அதிகாரம் சார்ந்த அர்த்தப் பரிவர்த்தனையூடாக மட்டுமே உணரப் பழகி விட்டோம். அதனால்தான் நமது பூர்வீக வாழ்விடத்தைச் சுற்றியுள்ள சுற்றுச் சூழல் மீது நமது கவனங்கள் அதிகம் செல்வதில்லை.

இன்றைய ( 07. 06 2016) Daily Mirror ஆங்கிலத் தினசரியில் றோஹான் பெட்டியகொட (Rohan Pethiyagoda) எழுதியுள்ள ஒரு நீண்ட கட்டுரை எனது மனதை ஈர்த்தது. An electric end to Vankalai Sanctuary? எனும் தலைப்பில் எழுதப்பட்டுள்ள அக்கட்டுரை மன்னார் மாவட்டத்திலுள்ள வங்காலை பறவைகள் சரணாலயம் எதிர்கொள்ள இருக்கின்ற ஆபத்துகளை விபரிக்கிறது.

இந்தப் பிரதேசம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியப் பெருநிலப்பரப்போடு இணைந்திருந்ததான கதைகளைக் கட்டுரையாளர் முன்வைக்கிறார். அந்தக் காலத்தில் கடல் மட்டமானது தற்போதுள்ளதை விடவும் 122 மீற்றர்கள் பணிவாக இருந்ததாகவும் அப்போது நமது முன்னோர்கள் கால்நடையாக இந்தியாவிலிருந்து இங்கு வந்ததாகக் கூறுகிறார். அதுமட்டுமல்லாமல் பல வகையான விலங்கினங்களும் தாவர இனங்களும் நமது வாழ்விடங்களை நோக்கிப் பரவுவதற்கும் இதுவே துணையாக அமைந்ததென்கிறார்.

இந்த நிலத்தொடர்புகள் பின்னர் அழிவுற்றாலும் பறவைகள் இதனை இடம்பெயர்வுக்கான பாதையாகவும் தங்குமிடமாகவும் அமைத்துக் கொண்டன. 2008 ல் வங்காலை பறவைகள் சரணாலயமாக அரசிதழில் கூறப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தற்போது அபிவிருத்தி எனும் பெயரில் இந்தப் பிரதேசத்தை அண்மித்ததாக பெரும் காற்றாலைகளை நிறுவி மின்சாரத் தேவைகளை சீரமைக்க அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகக் கூறப்படுகிறது. இந்தப் பணிகள் ஆரம்பிக்கப் படுமானால் பறவைகளின் இடப்பெயர்வு வழித்தடம் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாவதோடு அவைகளின் இருப்பையும் அழிக்கும் செயலாகவே அமையும்.

இந்தத் திட்டத்திற்குப் பின்னாலுள்ள சுற்றுச் சூழல் அழிவுகளை மறைத்துத்தான் காற்றாலைகள் நிறுவுவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் றோஹான் பெட்டியகொட தனது கட்டுரையில் கூறுகிறார்.

(டெயிலி மிரர் பத்திரிகையில் றோஹான் பெட்டியாகொட என்பவர் எழுதிய கட்டுரை தொடர்பாக தர்சிகா தாமோதரன் முக நூலில் பகிர்ந்திருந்த குறிப்பு)

# வாக்காளர் பதிவு புலம்பெயர்ந்தவர் ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

நீக்கப்படுவதுடன் 18 வயதை அடைந்தவர்கள் வாக்காளர் இடாப்பில் உட்சேர்க்கப்படுவதும் நடைபெறும். எனவே 31.05.1998 அன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்த அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்து கொள்ளும் தகைமை பெற்றவர்களாவர்.

ஒவ்வொரு வருடமும் யூன் மாதம் கிராம அலுவலர்கள் ஊடாக வாக்காளர்களை பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்படும். கிராம அலுவலர்கள் நேரடியாகவோ அல்லது உதவியாளர்கள் ஊடாகவோ இதற்கான விண்ணப்பங்களை வீடு வீடாக சென்று விநியோகித்து அவற்றை பூரணப்படுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வருடம் யூன் 1ம் திகதி வாக்காளர் இடாப்பு பதிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரண்டு மாதங்கள் வரை பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இலங்கையர்களில் வலுவான இலங்கை கடவுச் சீட்டை வைத்திருக்கும் இலங்கை பிரஜைகள், இரட்டை பிரஜா உரிமை பெற்றவர்கள் இலங்கையிலுள்ள தமது உறவினர்களூடாக கிராம அலுவலர் வழங்கியுள்ள விண்ணப்பத்தில் தமது பெயர்களையும் இணைத்துக் கொள்ளமுடியும். இவ்விண்ணப்பத்துடன் கடவுச் சீட்டின் பிரதியொன்றை ஒப்படைக்க வேண்டும். இடம்பெயர்ந்து இந்தியாவில் வசிப்பவர்களும் இவ்வாறு விண்ணப்பித்து வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களை பதிவு செய்துகொள்ள முடியும்.


## தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும் ,
ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் :-

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

294, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.
021 2222022

E P I C
P.O. Box 431
Sutton SM1 9LE
UK
email: eprlfp@yahoo.co.uk

165, கடல்முக வீதி,
திருகோணமலை.

# என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்! ஏன் உணவுப் பொருட்கள் இவ்வளவு விலைதனில்!

-மாதவன்-

இந்த நாட்டிலுள்ள பரந்துபட்ட மக்களின் பொருளாதார வருமான நிலைமைகளுக்கு பொருத்தமற்ற விதத்தில் இங்கு உணவுப் பொருட்களின் விலைகள் காணப்படுகின்றன. அரிசி தவிர்ந்த ஏனைய அனைத்து தானிய வகைகள், மசூர் பருப்பு மற்றும் பாசிப்பயறு தவிர்ந்த ஏனைய அனைத்து பருப்பு வகைகள், மீன் வகைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாமிச வகைகள், மரவள்ளிக்கிழங்கு தவிர்ந்த ஏனைய அனைத்து கிழங்கு வகைகள், பூசணிக்காய் தவிர்ந்த ஏனைய அனைத்து மரக்கறி வகைகள் என உணவுக்கு அடிப்படையான உற்பத்திகளின் சந்தை விலைகளைப் பார்க்கையில் இலங்கையிலுள்ள பரந்துபட்ட சாதாரண மக்களால் அவற்றைத் தாம் விரும்பிய மற்றும் தமக்குத் தேவையான அளவுக்கு வாங்கி சமைத்து உண்பதென்பது முடியாத ஒன்றாக ஆகியுள்ளது.

## ஓரிரு பொருட்களில் உயிர் வாழும் இலங்கை

அரிசியையும், மீனையும், தேங்காயையும், கோதம்பை (வெள்ளை) மாவையையும் அடிப்படையாகக் கொண்ட உணவு வகைகளைத் தவிர வேறு வகையான உணவு வகைகளை அனுபவிப்பது சாதாரண விடயமல்ல வென ஆகியிருக்கிறது. இங்குள்ள நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் கீரை வகைகள், பசும்பால், பருவ காலத்தே விளையும் சில உள்ளூர் பழ வகைகள் ஆகியனவற்றின் விலைகள் மட்டுமே விதிவிலக்காக - ஓரளவுக்கு பரவாயில்லை என்று திருப்திப்படக் கூடியதாக உள்ளது எனலாம்.

## இயற்கை வளங்களிருந்தும் ஏன் இந்த நிலை?

இவற்றுக்கான காரணங்களென்ன? போதிய நிலமில்லையா? தேவையான அளவு நீர்வளம் இல்லையா? இந்த நாடு மலட்டுத்தன்மையான மண்வளங்கள் கொண்ட நாடா? பாலைவனமாகவோ அல்லது பனி படர்ந்து நிறைந்த நாடா? இல்லவே இல்லை. இந்தியா மற்றும் சீனாவோடு ஒப்பிட்டால் இலங்கை அதிகமாகவே எல்லா வளங்களையும் கொண்ட நாடு. இலங்கையின் சனத்தொகையை இந்திய மாநிலமான கேரளாவோடு ஒப்பிட்டால், ஏறத்தாழ இலங்கையின் அதேயளவு நிலப்பரப்பையே கேரளாவும் கொண்டிருக்கின்றது. ஆனால், கேரளாவின் சனத்தொகையை இலங்கையின் சனத்தொகையோடு ஒப்பிட்டால் கிட்டத்தட்ட இரண்டு மடங்காகும். எனவே இலங்கையின் நிலவள அளவு அதனது சனத்தொகை அளவைத் தாங்க முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது எனக் கூற முடியாது. கேரளாவின் விவசாய உற்பத்தித் திறனை அவதானித்தால் அது இலங்கையை விட மிகவும் முன்னேறிய நிலையிலேயே உள்ளது. கேரளா மட்டுமல்ல இலங்கை, தென்னிந்திய மாநிலங்கள் எதனையும் விட விவசாய உற்பத்தித் திறனில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளதெனலாம். இங்கு மூளை வளமோ அல்லது மூலதன வளமோ குறைவாக இருக்கிறதெனக் கூற முடியாது.

சீனா தனது பிரஜை ஒருவருக்கு வருடத்துக்கு சராசரியாக 300 கிலோவிற்கு மேல் மரக்கறி உற்பத்தி செய்கிறது. இந்தியா இவ்விடயத்தில் 100 கிலோ உற்பத்தி செய்கிறது. ஆனால் இலங்கை கிட்டத்தட்ட 50 கிலோ மரக்கறியையே உற்பத்தி செய்கிறது. இலங்கை இவ்வாறு பின்தங்கியிருப்பதற்கு விவசாயிகளைக் குறை கூற முடியாது. இந்த நிலைக்கு முழுப் பொறுப்பும் இலங்கையின் மத்திய, மாகாண அரசுகளையே சாரும். விவசாய உற்பத்தித் திறன் அதிகரிப்பு, விவசாய உற்பத்திகளின் வளர்ச்சி, விவசாயிகளின் வாழ்க்கைத் தர உயர்வு ஆகிய விடயங்களில் மத்திய, மாகாண அரசுகள் இங்கு அக்கறையெடுத்துக் கொள்ளாதிருப்பதைக் காணக் கூடியதாயுள்ளது.

| | மரக்கறிகள் | பழங்கள் | இறைச்சி | முட்டை | பால் | மீன் |
|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 80.53 | 51.50 | 4-13 | 2.38 | 84.22 | 5.17 |
| சீனா | 333.20 | 84.61 | 57.73 | 18.47 | 31.52 | 33.06 |
| அமெரிக்கா | 113.09 | 97.14 | 117.61 | 13.89 | 256.77 | 21.65 |
| இலங்கை | 40.34 | 36.70 | 6.34 | 2.72 | 40.61 | 26.08 |
| ஸ்பெயின் | 123.83 | 79.65 | 93.09 | 13.85 | 179.84 | 42.37 |

புள்ளி விபரம் : ஐக்கியநாடுகள் சபையின் உணவு மற்றும் விவாய நிறுவனம் , 2011

இலங்கையிலும், உலக நாடுகள் சிலவற்றிலும் நபர் ஒருவர் வருடம் ஒன்றில் உணவாக உட்கொள்ளும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் (கிலோ கிராமில்)

இன்றைய வருமான நிலையில், காலையில் பாணும் சம்பலும் சில வேளை மசூர் பருப்புக் கறியும் அல்லது இடைக்கிடை கோதம்பை (வெள்ளை) மா புட்டு அல்லது இடியப்பம், தேங்காய் சம்பல் மற்றும் தேங்காயப்பால் சொதியுடன், மதியமென்றால் கீரை, பூசணி, கிழங்கு மற்றும் பருப்பு இவற்றில் ஒன்றோ அல்லது இரண்டு கறியுடன் சோறு (பெரும்பாலும் வெள்ளைச் சோறு) இரவில் பெரும்பாலும் காலை உணவு வகையையே மாறி மாறி கொப்பியடித்தல் - இதுவே இலங்கையின் சாதாரண மத்திய வர்க்க குடும்பங்களுக்கு சாத்தியமாக உள்ளது. மலையகத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் எல்லாம் 200 ரூபாவுக்கு அதிகமாகவே விற்கப்படுகின்றன. தக்காளியின் விலையும் அதே நிலை, கத்தரி, வெண்டி, பயிற்றை போன்றவையும் அடிக்கடி கிட்டத்தட்ட அதேயளவு விலைக்கே கிடைக்கின்றன. பச்சை மிளகாய், முருங்கைக்காய் என்பன கிலோ 1000 ரூபாய்கள் வரை சென்று விடுகின்றன.

இலங்கையின் சாதாரண பொருளாதார நிலையில் உள்ள மக்கள் ஏதோ ஒரு வகையில் விலை குறைந்த சிறிய வகை மீன்களை வாங்கி குழம்பு, பொரியல் என தமது மாமிச உணவு ஆசையைத் திருப்திப் படுத்திக் கொள்கின்றனர். இங்கு இறைச்சி, முட்டை என்பனவற்றை இந்த நாட்டின் சாதாரண மக்கள் நுகர வேண்டுமானால் அதற்காக அவர்கள் தமது வேறு அத்தியாவசியத் தேவைகளைத் தியாகம் செய்ய வேண்டிய கட்டாய நிலையில் உள்ளனர்.

## நோயாளி மக்களும் நோஞ்சான் தலைமுறையும்

இந்த நிலை இந்த நாட்டில் தொடருமானால் இங்கு மக்கள் மிகவிரைவில் சத்துக் குறைவு காரணமாக நோயாளர்களாவர், மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி விரைவில் குறைந்து விடும் நீரிழிவு நோயாளர்கள் அதிகரிப்பர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் இரத்தச் சோகை விகிதாசாரம் அதிகரிக்கும், பிறக்கும் குழந்தைகளின் இறப்பு வீதம் அதிகரிக்கும், குழந்தைகளின் உடல் வளர்ச்சியிலும் மூளை வளர்ச்சியிலும் பாதிப்புகள் ஏற்படும். இவற்றால் மருந்துகளும் வைத்தியசாலைகளுமே மக்களின் வாழ்க்கையாகும். அடிப்படை உணவுப் பொருட்களில் ஏற்பட்டுள்ள இந்தவிதமான அபரிமிதமான விலையேற்றப் போக்கை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தும் வகையாக அரச அமைப்புக்கள் திட்டமிட்ட ரீதியில் விரைந்து செயற்பட்டு மாற்றங்களை உருவாக்கவில்லையெனில் ஒரு யுத்தகாலத்தின் பாதிப்புகளை விட மிக மோசமான விளைவுகளை ஏற்புடுத்தும் என்பது நிச்சயம்.

இங்கு ஏற்பட்டுள்ள விலையேற்றங்கள் பயிர்களுக்கு ஏற்படும் பருவகால பாதிப்பின் விளைவு என விளக்குவதில் திருப்திகாண முடியாது. அனைத்து உணவுப் பயிர்களும் ஒரே காலகட்டத்தில் பருவகால பாதிப்புகளுக்கு உள்ளாவதில்லை. பருவகால பாதிப்பு என்பது ஒவ்வொரு பயிருக்கும் வெவ்வேறு காலகட்டங்களிலேயே ஏற்படுவது வழமை. அதுவும் ஒரு பயிருக்கான பருவகால பாதிப்பு என்பது ஓரிரு மாதங்கள் பற்றிய விடயமே. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் சில பயிர்கள் பருவ கால பாதிப்புகளுக்கு உள்ளாகிறபோது ஏனைய உணவுப் பயிர்கள் மூலம் அவற்றை ஈடு கட்டுவதற்கு இயற்கை எப்போதும் வாய்ப்புகளை வழங்குகிறது. இதில் இலங்கை விதிவிலக்கான ஒரு நாடல்ல. ஆனால் இங்கு உணவுப் பியிர்களின் விளைச்சல் நிலைமைகளும் அவற்றின் விலை நிலவரங்களும் அசாதாரணமானவையாகக் காணப்படுகின்றன.

## தரமான வாழ்க்கையே அபிவிருத்தியின் குறியீடு

பொதுமக்களின் சராசரி வருமான உயர்வுக்கும் வாழ்வுக்கு அவசியமாகத் தேவைப்படும் அடிப்படைப் பொருட்களின் விலைகளின் உயர்வுக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத் தொடர்பினை நிர்வகிப்பது அரசின் தேசிய பொருளாதார முகாமைத்துவ கடமையாகும். இன்னும் சொல்லப் போனால் பொருளாதார அபிவிருத்தி என்பது நாட்டிலுள்ள பரந்துபட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டதே. மக்களின் வருமானம் உயருகின்ற போது அடிப்படைத் தேவைப் பொருட்களின் விலைகளும் உயர்ச்சியடைவது இயல்பேயாயினும். அடிப்படைத் தேவைப் பொருட்களின் விலைகளின் உயர்வானது மக்களின் வருமான உயர்வு விகிதாசாரத்தை விடக் குறைவானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் விஞ்ஞான தொழிற்நுட்ப முன்னேற்றங்களால் சந்தைக்கு வரும் புதிய பொருட்களை வாங்கவும், மேலும் தரமான நுகர்வுப் பொருட்களை வாங்கும் நிலையை நோக்கி மக்கள் நகரவும், அதன் மூலம் அவர்களின் வாழ்க்கையின் தரம் மற்றும் வசதிகள் அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படும். அதுவே ஒரு நாட்டின் அர்த்தமுள்ள பொருளாதார முன்னேற்றமாகும்.

## சத்தற்ற உணவுகளால் சீக்காகும் தேசம்

நாட்டு மக்களிற் பெரும்பான்மையானோர் நோயாளிகளாவும், குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் நோஞ்சான்களாகவும் ஆகுவதைத் தடுத்து நிறுத்துவது நாட்டின் தேசிய பொ்ருளாதார நிர்வாகத்தின் தலையாய இலக்காக இருக்க வேண்டும். இதற்கான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் அரச நிறுவனங்கள் இந்த இலக்கை நோக்கி விரைந்து செயற்பட வேண்டும். அடிப்படைப் பொருட்களின் விலையேற்றம் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாது இருக்கலாம். ஆனால், பரந்துபட்ட மக்களால் அவர்களின் சுகாதாரமான உயிர்வாழ்க்கைகுத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு நாட்டின் பொருளாதாரம் மோசமடைவதால், அதன் தாக்கங்கள் தேசத்தில் அமைதியை அழித்துவிடும்: சட்ட ஒழுங்குகளைச் சீர்குலைக்கும்: அமைதியை விரும்பும், சட்டம் மற்றும் ஒழுங்குகளை மதிக்கும் பிரஜைகளுக்கு மதிப்பெதுவுமில்லாத - எதைச் செய்தாயினும் தமது சுயநலன்களைப் பேணிக் கொள்ள முனைவோருக்கும், சமூக விரோதிகளுக்கும் மட்டுமே வசதியான தேசமென்று ஆகிவிடும்

## பொருள்களின் விலையேற்றம் மஹிந்த ஆட்சியை நியாயப்படுத்தும்

அத்தியாவசிய, பொருள்களின் விலையேற்றங்கள் வெறுமனே மக்களின் சாப்பாட்டுப் பிரச்சினை என்பதோடு முடிவடையாது. இன, மத மற்றும் சாதி முரண்பாடுகளை விட அடிப்படை உணவுப் பொருட்களின் விலையேற்றம் மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான முரண்பாட்டை மிக வேகமாகவே கூர்மைப்படுத்தி அரசியற் குழப்பங்களை உருவாக்கும். அரிசி விலையேற்றத்தால் 1953ல் ட்டலி சேனநாயக்கா ஆட்சியை விட்டு இறங்கி ஓட வேண்டியேற்பட்டது, உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வால் 1977 தேர்தலின்போது ஐக்கிய முன்னணி படுதோல்வி அடைந்தது. இந்தியாவில் வெங்காய விலையேற்றம் வாஜ்பாய் தலைமையிலான ஆட்சியைக் கவிழ்த்த வரலாறு இங்கு நினைவிற் கொள்ளத் தக்கது. இப்போதாயினும் நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுக்கத் தவறினால் இங்கு மலையேறியிருக்கும் விலைவாசி நல்லாட்சியை நடத்தவெனக் கூறி வந்த இன்றைய மைத்திரி - ரணில் கூட்டாட்சி இடையிலேயே ஆட்சியை விட்டு வீட்டுக்குப் போக வேண்டிய நிலைமைக்கு ஆக்கிவிடக் கூடும்.

# பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற முடிவு




சமீபத்தில் இலண்டன் வந்திருந்த இலங்கை பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷா டி சில்வா, பிரதமர் காரியாலயத்தின் பிரதம அதிகாரிகளில் ஒருவரான திருமதி. றொஸி சேனநாயகா ஆகியோர் வெளிநாடுவாழ் இலங்கைத் தமிழர் அமைப்பின் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அரசியல் அமைப்பு மாற்ற நடவடிக்கைகள், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்களின் எதிர்காலம் குறித்த அரசின் முயற்சிகள் பற்றி எடுத்துரைத்தனர். அத் தருணத்தில் நாட்டின் தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வு, அதிகார பகிர்வு, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு போன்ற பல அம்சங்கள் கலந்து கொண்டவர்களால் எடுத்துரைக்கப்பட்டன.

**வாசகர்களே,**

இக்கடிதம் இலண்டன் எனப்படும் இடத்திலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து எழுதப்படும் கடிதமாக நீங்கள் எண்ணப் போவதில்லை. சில விநாடிகளுக்குள் தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளும் அளவுக்கு தூரஅளவு மிகவும் சுருங்கிவிட்டது. இருந்தபோதும் இக்கடிதம் பல வகையில் உங்களுக்கு உதவுமென்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

பல்லாயிரக் கணக்கான எமது உறவுகள் தமது நிரந்தர வாழ்விடங்களாக புலம்பெயர் தேசங்களை குறிப்பாக பிரித்தானியாவை தேர்ந்தெடுத்த நிலையில், எமது சந்ததிகள் தமது தாயகமாக இந்த நாட்டினை வரித்துக் கொண்டு விட்டனர். இந்நிலையில், அவ் உறவுகளின் வாழ்வும், வளமும் உங்கள் கவனத்திற்குரிய அம்சமே. எனவே அவ் உறவுகளின் நடவடிக்கைகள், தமது மூதாதையரின் தாயகம் தொடர்பாக அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் என்பன என்றும் உங்களின் கவனத்திற்குரிய செய்திகளே.

## இங்கிலாந்தில் தியாகிகள் தினம்

அந்த வகையில், கடந்த யூன் 19ம் திகதி தற்போது தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியாக பெயர் மாற்றம் பெற்றுள்ள முன்னாள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் தமது தியாகிகளின் தினத்தை அமைதியோடு அனுஷ்டித்தனர். பிரதி வருடமும் இத் தினம் அனுஷ்டிக்கப்படும் போது அதில் தவறாது கலந்துகொள்ளும் ஒருவனாக இருந்துள்ளேன்.

இவ்வருட நிகழ்வுகள் முன்னைய ஆண்டுகள் போலல்லாமல் கட்சியின் பெயர் மாற்றம் குறித்த அடிப்படை நோக்கங்களை விளக்குவதாக அமைந்திருந்தது. தொழிலாள வர்க்கத்தின் விடுதலையை உறுதி செய்வதற்கு, புரட்சிகர சோசலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கு, முதலாளித்துவ கட்டுமானத்தை நிர்மூலமாக்குவதற்கு தொழிலாள வர்க்கப் புரட்சி ஒன்றே வழி என எண்ணி அதன் வழியில் அரசியல் பாதையை கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக நடத்திச் சென்றவர்கள் தற்போது சமூக ஜனநாயக மாற்றம் ஒன்றை நோக்கித் திரும்புவதற்கான நியாயங்கள் என்ன? என்பதை விளக்கும் ஓர் அரிய நிகழ்வாக அமைந்திருந்தது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் உலகம் இரண்டு கூறுகளாக, இரண்டு வெவ்வேறு அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களை நோக்கியதாக சென்றன. பிரித்தானிய குடியேற்ற ஆதிக்கத்தில் சிக்குண்டிருந்த இலங்கை போன்ற நாடுகளில் விடுதலை என்பது குடியேற்ற ஆதிக்கத்திலிருந்தும், வறுமைப் பிணியிலிருந்தும் விடுதலை என்ற போராட்டங்களை நடத்த வேண்டி ஏற்பட்டது. காலம் நகர்ந்தது. குடியேற்ற ஆதிக்க விடுதலை சாத்தியமாகியது. ஆனால், வறுமை முன்னரை விட உக்கிரமாகியது. பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை மக்கள் மனதில் பலமாக வேரூன்றியது. பொருளாதார பலம் கொண்ட சக்திகள் தேர்தல் என்ற மக்களாட்சித் தத்துவத்தை தமது ஊழல் பலத்தால் மாற்றினார்கள். வறுமை, பொருளாதார சுரண்டல், ஜனநாயக ஒடுக்குமுறைக்கு எதிராக தொழிலாளர்கள், இளைஞர்கள் போராடினார்கள். இருப்பினும், அவை சக்திவாய்ந்த ராணுவ பலத்தினால் ஒடுக்கப்பட்டன. தேர்தல் என்பது பணபலத்தினால் தீர்மானிக்கப்படும் சடங்காக மாறிய நிலமைகள், வாக்குறுதிகளை வழங்கி மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள் பணத்திற்கு விலைபோகும் அவலங்கள் நாளாந்த அரசியல் நிகழ்வுகளாகின.

நடைமுறையிலிருக்கும் திருந்த பொருளாதாரம் பாராளுமன்ற ஆட்சிமுறையைப் பலவீனமாகியதோடு மட்டுமல்லாமல், பின்தங்கிய வகுப்பினருக்காகப் போராடும் சக்தியைக் கொண்டிருந்த தொழிலாளவர்க்க அமைப்புகளையும் பலவீனமாக்கியது. புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திகள் பலவீனப்பட்டு, ஜனநாயக நிறுவனங்களும் செயலிழந்த நிலையில் எழுந்த புதிய நிலமைகள் புதிய அரசியற் பாதையை, ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் வழிகளை வேண்டி நிற்கின்றன. அதன் விளைவே சமூக ஜனநாயகத்தை நோக்கி நிற்கும் அரசியல் நிலைப்பாடாகக் காணப்படுகிறது.

இப் புதியமாற்றம் மேலும் பல புதிய அரசியல் விவாதங்களை - மாற்றங்களை நோக்கிய பாதைகளைத் திறக்கும் என எதிர்பார்க்கலாம்.

## வெளிநாடுவாழ் இலங்கைத் தமிழர் அமைப்பின் கூட்டத்தில் இலங்கை அமைச்சர்

பிரித்தானியாவில் நிரந்தரமாக வாழ்ந்து வரும் இலங்கையரின் ஓர் அங்கமாக உள்ள தமிழர்கள் தமது தாயகத்திற்கும், தமக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்த எண்ணி அங்கு அமையும் அரசுடன் சுமுகமான உறவுகளை ஏற்படுத்த எண்ணினர். அங்கு இடம் பெற்ற அமைதியற்ற நிலைமைகளால் தாயகத்தினை விட்டு வெளியேறியவர்கள் தமது உறவுகள், நிலஉரிமைகள், பிரஜா உரிமை என்பவற்றின் எதிர்காலம் தொடர்பாக சிந்திப்பதற்கு வாய்ப்பிருக்கவில்லை. தற்போது அங்கு காணப்படும் நிலைமைகள் அவர்களுக்கு திருப்தி தருவதாக இல்லை. குறிப்பாக அவர்களது காணிகளின் உரிமைகளில் காணப்படும் மோசடி, முதிர்ந்த பெற்றோர் எதிர்நோக்கும் நெருக்கடிகள், இலங்கைப் பிரஜா உரிமை பெறப்படுவதில் காணப்படும் சிக்கல்கள், தாயக அபிவிருத்தியில் புலம்பெயர்ந்தோர் வழங்கக் கூடிய பங்களிப்புகள் போன்ற இன்னபிற - தேவைகள் குறித்து அமையும் அரசுகளோடு பேசுதல் என்ற அம்சத்தின் அடிப்படையில் தற்போது இலங்கையில் அமைந்துள்ள அரசுப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினர்.

சமீபத்தில் இலண்டன் வந்திருந்த பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷா டி சில்வா, பிரதமர் காரியாலயத்தின் பிரதம அதிகாரிகளில் ஒருவரான திருமதி. றொஸி சேனநாயகா ஆகியோர் வெளிநாடுவாழ் இலங்கைத் தமிழர் அமைப்பின் கூட்டத்தில் கலந்துகொண்டனர். தற்போது இலங்கையில் இடம்பெற்றுவரும் அரசியல் அமைப்பு மாற்ற நடவடிக்கைகள் குறித்தும், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குறிப்பாக பெண்கள், சிறுவர்களின் எதிர்காலம் குறித்த அரசின் முயற்சிகள் குறித்தும் எடுத்துரைத்தனர். அத் தருணத்தில் நாட்டின் தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வு, அரசியல் அமைப்பில் அதிகார பகிர்வின் அடிப்படையிலான தீர்வு, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு போன்ற பல அம்சங்கள் கலந்து கொண்டவர்களால் எடுத்துரைக்கப்பட்டன.

முதன் முறையாக இலங்கை அமைச்சர்கள் புலம்பெயர் தமிழர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் கேள்விகளுக்கு பதில் வழங்கிய வரலாற்று நிகழ்வாக அந்நிகழ்வு அமைந்தது.

## பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற முடிவு

பிரித்தானிய அரசியல் வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாக இவ் வாக்கெடுப்பு கருதப்படுகிறது. ஆளும் கன்சவேட்டிவ் கட்சியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுவது குறித்து மக்களின் அபிப்பிராயம் பெறப்படும் எனத் தெரிவித்திருந்தனர். அதன் பிரகாரம் கடந்த யூன் 23ம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இவ் வாக்கெடுப்பின் பின்னணி குறித்து கடந்த கண்ணோட்டத்தில் விபரங்கள் தரப்பட்டிருந்தன. இவ்வாக்கெடுப்பில் 52 சதவீத மக்கள் விலகுவதற்கு ஆதரவாகவும், 48 சதவீதமானோர் இணைந்திருப்பதற்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். 2015 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட டேவிட் கமரோன் இவ்வாக்கெடுப்பின் பின்னரும் தொடர்ந்து பிரதமராக பதவி வகித்திருக்க முடியும். ஆனால், இந்த வாக்களிப்பில் அவர் இணைந்திருப்பதை ஆதரித்திருந்தார். மக்களிற் பெரும்பான்மையினர் அதற்கு எதிராக வாக்களித்த காரணத்தால் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப அரசை நடத்தும் பொறுப்பை தனது கட்சியிடம் விட்டுச் செல்வதாகக் கூறி பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

இத்தேர்தல் குறித்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அரசியல் கலாசாரம் அதிகம் உண்டு. தேர்தல் முடிவுகள் எவ்வாறாக அமையினும், கொடுத்த வாக்குறுதியின் பிரகாரம் தேர்தலை நடத்தினார். இத் தேர்தல் முடிவு தமது நோக்கத்திற்கு எதிராக அமைந்தால் ஏற்படக்கூடிய விளைவுகளை நன்கு தெரிந்திருந்தும் அவர் தேர்தலை நடத்தியது ஜனநாயகத்தின் மீது அரசியல் கட்சிகள் கொண்டிருக்கும் மதிப்பினை உணர்த்துகிறது. அவர் பதவியில் ஒட்டியிருக்க விரும்பவில்லை. டேவிட் கமரோன் காலத்தில் பல வியக்கத்தக்க மாற்றங்கள் நடந்துள்ளன. உதாரணமாக மிகவும் கிறிஸ்தவ பின்னணியைக் கொண்ட பிரித்தானியா திருமணம் என்பது ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான ஒப்பந்தம் எனக் குறிக்கிறது. ஆனால், இன்று பால் சமத்துவம் குறித்து பலமான கருத்து நிலவி வருவதால் இரு ஆண்பாலார்கள் திருமணம் செய்யும் உரிமைக்கு அவரது அரசு உரிமை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இவ் வாக்கெடுப்பு ஐக்கிய ராஜ்யத்திற்கு புதிய நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு ஐக்கிய ராஜ்யத்தின் ஒரு பிரிவாகிய ஸ்கொட்லாந்து தனிநாடாக பிரிவதா இல்லையா என்ற வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி பிரிவினையை ஆதரித்தது. இருந்த போதிலும், அக்கோரிக்கை சொற்ப வாக்குகள் விகிதத்தில் தோற்கடிக்கப்பட்டது. ஸ்கொட்லாந்து அரசை நிர்வகித்து வரும் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி மீண்டும் பிரிவினை கோரி வாக்கெடுப்பு நடத்தப் போவதாக மிரட்டியுள்ளது.

இதன் பின்னணி என்ன? ஸ்கொட்லாந்து அரசு அதிகார பகிர்வின் அடிப்படையில் சுயாட்சி நடத்தி வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்துடன் பலமான உறவுகளை வைத்திருப்பது அவர்களது கொள்கையாக உள்ளது. யூன் 23ம் திகதி இடம் பெற்ற வாக்களிப்பில் பெருந்தொகையான ஸ்கொட்லாந்து மக்கள் இணைந்திருப்பதற்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆனால், ஐக்கிய ராஜ்யத்தின் இதர பிரிவினர் பிரிந்து செல்ல வாக்களித்த போதிலும் அது சுயமாக ஆட்சி நடத்தும், தம்மைக் கட்டுப்படுத்தாது என்பது அவர்களின் வாதமாகும். அத்துடன் பிரிந்து செல்வதற்கு எதிராக பெருந்தொகையான மக்கள் வாக்களித்துள்ளதால் அம்மக்களின் ஜனநாயக தீர்ப்பை மதித்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாக ஸ்கொட்லாந்து முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

எமது கவனத்திற்குரிய அம்சம் என்னவெனில், ஐக்கிய ராஜ்யத்தில் அங்கமாக உள்ள இதர பிரிவினர் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிவதாக வாக்களித்த போதும் சுயாட்சியை அனுபவிக்கும் ஸ்கொட்லாந்து மக்களின் அபிப்பிராயம் வேறாக இருந்தது. ஐக்கிய ராஜ்யம் வெளியேற விரும்பிய போதும் ஸ்கொட்லாந்து இணைவதை விரும்பியது. எனவே, ஐக்கிய ராஜ்யம் தமது எண்ணங்களை ஸ்கொட்லாந்து மக்கள் மேல் திணிக்க முடியாது. சுயாட்சியை அனுபவிக்கும் ஸ்கொட்லாந்து மக்கள் பிரிவினைக்கான வாக்கெடுப்பின் போது ஐக்கிய ராஜ்யத்தில் இணைந்திருக்க வாக்களித்தார்கள். தற்போது ஐக்கிய ராஜ்யத்தின் பெரும்பான்மையினர் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக வாக்களித்தார்கள். ஆனால், ஸ்கொட்லாந்து மக்கள் இணைந்திருக்க வாக்களித்தார்கள். இங்கிலாந்துக்காரர்கள் ஐக்கிய ராஜ்யத்தின் பெரும்பான்மையினர் என்ற காரணத்திற்காக தமது ஆதிக்கத்தினை சிறுபான்மையினரான ஸ்கொட்லாந்து மக்கள் மேல் திணிக்க முடியுமா?

இது இன்றைய இலங்கை நிலைமைகளுக்கு பொருத்தமானது. பெரும்பான்மைத் தீர்மானம் என்ற காரணத்திற்காக சிறுபான்மையினரின் அபிலாஷைகளுக்கு எதிராக செயற்பட முடியுமா? திணிக்க முடியுமா? ஜனநாயகத்தின் இந்த சித்து விளையாட்டின் முடிவுகள் என்ன? ஸ்கொட்லாந்து மக்கள் மீளவும் பிரிவினை கோரி வாக்களிப்பார்களா? முடிவு என்னவாக அமையும்? பொறுத்திருந்து அடுத்த இதழில் பார்ப்போம்.

# வடக்கு கிழக்கு தமிழ்ச் சாதியை விதியே விதியே என் செய நினைக்கிறாய் ?

- சித்திரகுப்தன் -

**இங்கு தமிழ்த் தேசவாத அரசியல் விரும்பிகளைப் பொறுத்தவரையில் போய்ச் சேர முடியாத ஊருக்கு வழி காட்டுபவர்கள் போல ஜெனீவாவால் நீதி கிடைக்கும், இந்தியாவால் அரசியல் தீர்வு கிடைக்கும், அமெரிக்காவால் சமஷ்டி கிடைக்கும் என தமிழ் மக்களுக்கு நிலாக்காட்டி சோறூட்டிக் கொண்டிருக்கிறார்கள்.**

"வெளியக விசாரணையா அல்லது உள்ளக விசாரணையா?", "பாதுகாப்பு வலய காணிகள் விடுவிக்கப்படுமா? இல்லையா?", "அரசியற் கைதிகள் எப்போது விடுவிக்கப்படுவார்கள்?", "சம்பந்தர் சொன்னபடி அரசியற் தீர்வு வருமா? வராதா?", என்ற சில கேள்விகளை வைத்து அரைத்த மாவை மீண்டும் மீண்டும் அரைப்பது போல இங்குள்ள தமிழ்ப் பத்திரிகைகள், நாள்தோறும் மாறிமாறி தலையங்கங்களாக வெளியிட்டு மக்களை வேறெந்த உலகமும் தெரியாமற் பண்ணுவதில் மிகவும் அக்கறையோடு செயற்பட்டு வருகின்றன. தாங்கள் மட்டும் தான் தமிழ் மக்களின் அரசியல் சமூகப் பிரதிநிதிகள் என்பது போலவும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பாக தங்களைத் தவிர வேறு யாருக்கும் அக்கறை இல்லை என்பது போலவும் இந்தப் பத்திரிகை வியாபாரிகள் தமது ஊடக வல்லமையைப் பயன்படுத்தி அராஜகம் பண்ணி வருகின்றனர். இந்தா சர்வதேசம் தமிழர்களுக்கு சாதகமாக வந்து விட்டது!, தமிழர்களுக்கு ஆதரவாக செயற்படப் போகிறது! என சில தடவைகளும், பின்னர் சர்வதேசம் தமிழர்களுக்கு துரோகமிழைக்கிறது என வேறு வேளைகளிலும் கருத்துக்களை வெளியிட்டு தமிழர்களைக் குழப்புவதிலும் இவர்கள் அசகாய சூரர்களாக விளங்குகின்றனர்.

இங்குள்ள அரை வேக்காட்டுப் புத்திஜீவிகளோ, யுத்தகாலத்தில்தான் தமிழ் மக்கள் மத்தியில் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்பட்டிருந்ததாகவும் அப்போது தான் தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும் பயமின்றியும் வாழ்ந்ததாகவும் சூடு சுரணை எதுவுமின்றி கூறி வருகிறார்கள். அவர்களிடம் "போவோமா மீண்டும் அந்தப் பொன்னுலகத்துக்கு" எனக் கேட்க வேண்டியிருக்கிறது.

வடக்கு மாகாண சபையில் நடப்பவைகளைப் பார்த்தால் போலி வேடதாரிகளுக்கு நாடக மேடை போட்டு கூத்து நடத்த விட்டிருப்பது போலவே தோன்றுகிறது. தமிழரசு மலர்ந்து விட்டது என வந்த வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளுக்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் மற்றும் தேவைகளுக்கும் எந்தவித தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. மாகாண சபைகள் பயனற்றவை, எனவே அவை இல்லாது ஒழிக்கப்பட வேண்டுமென சிங்கள பேரினவாத சக்திகள் முனைகின்றன. அதே வேளை, தமிழ்த் தேசவாத வேடதாரிகள் மாகாண சபையைத் தங்களது செல்வாக்கு மையமாக பயன்படுத்திக் கொள்கிற போதிலும் இந்த சபையால் மக்களுக்கு எதுவித பயனும் இல்லை என நிரூபித்துக் காட்டுவதிலேயே முனைப்பாக இருக்கின்றனர். இந்த இரண்டு சக்திகளினதும் நோக்கங்கள் வேறுபட்டவையாயினும், அவற்றின் செயற்பாடுகளின் விளைவு ஒன்றாகவே தான், உள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் உள்ள மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் எனும் உள்ளூராட்சி சபைகளை தமிழ்க் கூட்டமைப்புக்காரர்களே 2011க்கும் 2015க்கும் இடைப்பட்ட நான்கு ஆண்டுகள் ஆண்டனர். இந்தக் காலகட்டத்தில் ஊழல்கள், மோசடிகள், அதிகாரங்களைப் பயன்படுத்தி சுயநலன்களை பலப்படுத்திக் கொண்டமை என்பதைத் தவிர தமிழ் மக்களுக்கு சிறிதளவு நன்மையையும் செய்யவில்லை. அபிவிருத்திக்கென கிடைத்த பணங்களும் கொழும்புக்கு திரும்பிச் சென்றது மட்டுமே நடந்தது.

2013ம் ஆண்டு வடக்கில் தமிழரசு மலர்ந்து விட்டது என மாகாண சபை ஆட்சியைக் கைப்பற்றிய தமிழ்க் கூட்டமைப்புக்காரர்கள் மாதம் தோறும் கை நிறைய சம்பளங்களையும், யார் யாரின் பெயரிலெல்லாம் சம்பளங்ளைச் சுருட்டிக் கொள்ள முடியுமோ அவற்றையெல்லாம் தவறாமற் பெற்றுக் கொள்கிறார்கள். வரிச் சலுகைகளுடன் சொகுசு வாகனங்கள், அரச செலவில் விருந்துபசாரங்கள், மாலை மரியாதைகள் என வாழ்ந்து வரும் இவர்களால் மக்களுக்கு எள்ளளவு பிரயோசனமும் கிடைப்பதாக இல்லை. சம்பந்தா சம்பந்தமில்லாத விழாக்களில் நாடா வெட்டிகளாகவும் யாரோ கொடுக்கும் பரிசை மேடைகளில் கையளிப்பவர்களாகவும் மட்டுமே உள்ளனர். இங்கு மாகாண சபை ஊழல் குற்றச்சாட்டுகளால் நாறிப் போயிருக்கிறது. உட்கட்சிக் குத்துவெட்டுகளால் மாகாணசபையின் இலட்சணம் கண்டு சந்தி சிரிக்கிறது. வெட்கித் தலைகுனிய வேண்டிய இந்த இழிவுநிலை குறித்து கூட்டமைப்புத் தலைவர்களுக்கு துளியளவு கூட அக்கறை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இப்படியெல்லாம் தம்மைச் சூழ நடந்து கொண்டிருக்கிற போது "என்னமோ நடக்குது, மர்மமா இருக்குது, ஒண்ணுமே புரியலே உலகத்திலே" என தமிழ்ப் பெருங்குடி மக்கள்! சூடு சுரணை எதுவுமில்லாமல் தாமுண்டு தம் பாடுண்டு என வாழ்ந்து வருகிறார்கள். அதே அவர்கள் தேர்தல் வருகிற போது மட்டும் தமிழ் உணர்ச்சி பீறிட கண்ணை மூடிக் கொண்டு வாக்களிக்கிறார்கள். இந்த மக்கள் கூட்டம் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் தாங்கள் யாருக்கு வாக்களித்தார்களோ, அவர்கள் தொடர்பாக நாளாந்தம் வெளிப்படுத்துகின்ற சலிப்புக்கும் அதிருப்திக்கும் தேர்தலின் போது அவர்கள் வாக்களிப்பதற்கும் எதுவித சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இங்குள்ள தமழ்ச் சமூத்திலுள்ள பெரும்பான்மையினர் எந்த மண்ணை தமது தாயகம் என்று குறிப்பிடுகிறார்களோ! எந்த மண்ணை மீட்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறார்களோ, அந்த மண்ணிலிருந்து தங்களது பிள்ளைகளை பிரித்து, எதை விற்றாயினும் மேலைத் தேச வெளிநாடொன்றிற்கு நிரந்தரமாக அனுப்பி விடுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

இங்குள்ள தமிழ்ச் சமூத்திலுள்ள பெரும்பான்மையினர் யாரைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்களாகக் கூறுகிறார்களோ, அது பற்றி உண்மையிலேயே அவர்களை நம்புகிறீர்களா என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டால் -உமக்கென்ன விசரே! உவங்களைப் பற்றி எங்களுக்குத் தெரியாதே! உவங்கள் கள்ளரென்று! என தெளிவான அறிவு உடையவர்களாகப் பேசுகிறார்கள்.

இவை எதைக் காட்டுகிறது என்றால் இங்குள்ள தமிழ் மக்களிற் பெரும்பான்மையினரின் நாக்குக்கும் நெஞ்சுக்கும் பெரும் இடைவெளி இருப்பது தெரிகிறது. அவர்களின் உடலுக்கு உள்ளேயே ஒன்றை ஒன்று இயல்பாக ஏமாற்றும் குணக்கூறு இறுக்கமாக ஒட்டியிருப்பது தெரிகிறது. நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் இல்லாத ஒரு சமூகம் மாற்றினத்தவரிடமிருந்து நீதியைப் பெறும் தகுதியைப் பெற்றிருக்கிறதா என்பது கேள்விக்குரியதாகும்.

இதில் உள்ள மற்றுமொரு விடயம் என்னவெனில், இங்கு தமிழ்ச் சமூகத்திலுள்ள பெரும்பான்மையினரிடையே இன்றைய இந்த இரட்டை மனக் கோளாறு நிலை ஏற்பட காரணமாக யார் யாரெல்லாம் பங்களித்தார்களோ அவர்களால் இந்த தமிழ்ச் சமுதாயத்தின் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் உண்மையை வாக்கில் ஒளிர வைக்க முடியாமல், நடப்பில் வெளிவர வைக்க முடியாமல் தவிப்பதுதான் வேடிக்கையான அல்லது வேதனையான விடயமாகும். இந்த சமுதாயத்திலுள்ள பிரபலமான, செல்வாக்கான அரசியல் சமூகத் தலைவர்களும் புத்திஜீவிகளும் தமது நலன்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக தமது சமுதாயத்திலுள்ள இரட்டைப் பிறழ்நிலைக் குணாம்சத்தை தாமும் அங்கீகரித்து வாழ்வதையே சுலபமான வழியாகக் கொண்டுள்ளனர்.

முப்பது ஆண்டுகால யுத்தத்தால் இந்தச் சமூகத்தில் ஒரு சமூக சொறி நோய் தொற்றிப் பரவியுள்ளது. இங்கு அந்தச் சொறி நோயைக் குணப்படுத்துவதற்காக சிரமப் படுவதை விட சொறி நோயையே சுகமாக சொறிந்து அனுபவிப்பதற்கு பழகிக் கொண்ட சமூகமாக தமிழ்ச் சமூகம் ஆகியுள்ளது. அதில் அது பெருமையும் படுவதுதான் வெட்கக் கேடாக உள்ளது. ●

## அரசியல் தீர்வு : இந்தியாவின் ... ( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

மாகாண முதலமைச்சருக்கு வாக்குறுதியும் வழங்கியதாக கயிறும் விட்டார்கள். ஆனால், இப்போது இலங்கையின் அரசியற் தீர்வு விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு திட்டவட்டமாக தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

டெல்லியிலுள்ள பாதுகாப்பு தொடர்பான கல்வி மற்றும் ஆய்வு நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஓர் ஆய்வு மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்த இலங்கை ஊடகவாளர்களிடம் இந்திய அரசின் கொள்கை வகுப்பாளர்கள் இலங்கையின் அரசியற் தீர்வில் இந்தியாவின் பங்கு பற்றி பின்வருமாறு கூறியுள்ளனர்:- "அரசியற் தீர்வை இலங்கை அரசே தீர்மானித்து நடைமுறைப்படுத்த வேண்டும். அதில் இந்திய அரசாங்கம் நேரடியாகத் தலையிட முடியாது. இலங்கை தொடர்பாக இந்தியாவுக்கு 30 ஆண்டு கால அனுபவம் உள்ளது. தமிழர்களைப் பாதுகாக்கவே – தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தரவே இநதியா செயற்பட்டது. 13வது திருத்தம் ஏற்படுவதற்கு இந்தியா வழிவகுத்தது. அப்போதைய அரசு அதை ஏற்றுக் கொண்டாலும் இது வரையில் 13வது திருத்தத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை. 1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படையை இந்தியா இலங்கைக்கு அனுப்பியிருந்தது. இந்த விவகாரத்தில் இந்தியா தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்தது. இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட சமரசத்தால் அதிகளவான இழப்புகளை இந்தியா சந்திக்க நேரிட்டது - வடக்கு, கிழக்கில் பல்லாயிரக் கணக்கான இந்தியப் படைகள் உயிரிழக்க நேரிட்டது. இந்த அனுபவத்தால் ஏற்பட்ட கசப்பான உணர்வு இன்றும் இந்தியாவிடம் உள்ளது. புதிய அரசியல் அமைப்புக்கான உருவாக்கம் தொடர்பாக தமிழர் தரப்புகள் இந்தியாவுக்கு தெரிவித்து வருகிறபோதிலும் இவ் விடயத்தில் இந்தியாவின் நேரடித் தலையீடுகள் எதுவும் இருக்கப்போவதில்லை".

இவ்வாறு இந்தியாவிலிருந்து இந்திய அரசின் கொள்கை நிலைப்பாடு தொடர்பாக திட்டவட்டமான கருத்து வெளிவந்திருப்பது சிங்கள தேசவாத சக்திகளுக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கும். ஆனால், தமிழர்களுக்கு சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி அரசியற் தீர்வைப் பெற்றுத்தருவது இந்தியாவின் தார்மீகப் பொறுப்பு என இந்தியாவை வற்புறுத்தி வரும் தமிழ்த் தேசவாதிகளுக்கு, இது அதிர்ச்சியையே கொடுத்திருக்கும். தமிழீழமே ஒரே தீர்வு எனும் நிலைப்பாட்டிலுள்ள தமிழக அரசியற் தலைவர்களால் இப்போது இந்திய அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டை மாற்ற முடியுமா என்பது கேள்விக் குறியே! "இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் இந்தியா தலையிடுவது தமிழர்கள் மீதான எந்த அக்கறையாலுமல்ல, மாறாக, இந்தியாவின் நலனுக்காக மட்டுமே" என இந்தியா தொடர்பான எதிர்ப்பு நிலை கொண்டுள்ள அரசியல் விமர்சகர்களுக்கு இந்தியாவின் இந்த நிலைப்பாடு திருப்தி அளித்திருக்க வேண்டும்.

எவ்வாறாயினும், இந்திய கொள்கை வகுப்பாளர்களின் விளக்கங்களில் "இந்தியா நேரடியாகத் தலையிடாது" என்பது வலியுறுத்தப்பட்டிருப்பினும் அவர்கள், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியா எந்த வகையிலும் ஈடுபாடு காட்டாது எனக் கூறாமை கவனத்துக்குரியது.

# அபிமன்யு பதில்கள்

*அ.வேதநாயகம் யாழ்ப்பாணம்*

**கேள்வி: சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் துரையப்பா விளையாட்டரங்கு புனரமைக்கப்பட்டு, ஜனாதிபதி மைத்திரிபாலா சிறிசேனாவால் திறந்து வைக்கப்பட்டதையிட்டு என்ன நினைக்கிறீர்கள்?**



பதில்: முதலில் ஒரு பின்னணி:- அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் மேயர். அப்போது தமிழ்மக்கள் மத்தியில் முக்கிய கட்சிகளாக வலம் வந்த தமிழரசுக் கட்சி (ஆனால், ஆங்கிலத்தில் 'Federal Party') தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளில், ஒருவர் இணைந்து கொண்டால் தான் பெரும்பான்மைத் தமிழர்களின் வாக்கைப் பெற்று அரசியல் பதவிகள் வகிக்கலாம் என்ற நியதியை உடைத்தவர் அவர்களை எதிர்த்து, சிறிமாவோ பண்டாரநாயகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு (S.L.F.P) ஆதரவு அளித்தவர். ஆனால், சுயேட்சை வேட்பாளராக, யாழ் மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்டு அதன் மேயராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாண நகரின் அடித்தள மக்களின் அன்பைப் பெற்றவர். - அவருடைய காலத்தில் தான், அவருடைய பிரயத்தனங்களின் காரணமாகத்தான், இப்பொழுது உபயோகத்திலிருக்கும் யாழ் சந்தைக் கட்டிடமும் நிறுவப்பட்டது. அவரின் பெயரால் தான் யாழ்ப்பாணத்தில் ஒரு பெரும் விளையாட்டரங்கு நிர்மாணிக்கப்பட்டு, அவரது பெயர் சூட்டப்பட்டு "துரையப்பா விளையாட்டரங்கம்" எனத் திகழ்ந்தது.

அவர் ஒரு கிறிஸ்தவர். ஆனால், மத பேதங்களைப் பேணாதவர். ஒவ்வொரு ஞாயிறு காலையும் பொன்னாலை வரதாரஜப்பெருமாள் கோயிலுக்குத் தனியனாகச் சென்று வணங்கி வருவது அவரது வழமை.

இவ்வாறு ஒரு நாள், ஏழத்தாழ 40 வருடங்களுக்கு முன்னர், அவர் கோயில் வளாகத்தில் தன் காரை நிறுத்தி விட்டு, தனியனாக நடந்து சென்று கும்பிட்டுத் திரும்பும் நேரம், "தமிழினத் துரோகி" என முத்திரை குத்தப்பட்டு கோயில் சன்னிதியிலேயே பிரபாகரனால் படுகொலை செய்யப்பட்டார். அவரது இரத்தம் அந்தச் சன்னிதியின் மண்ணை நனைத்தது. அந்தப் படுகொலை தான் பிரபாகரனால் செய்யப்பட்ட முதற் படுகொலை. "அவர் ஒரு துரோகி அதனால்தான் அவரைக் கொன்றேன்" என்று பிரபாகரனே உரிமை கோரியிருந்தார். "ஆமாம் அவர் துரோகிதான்! கொல்லப்பட வேண்டியவர்தான்!!" என்று யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களும் ஆமோதித்து ஆர்ப்பரித்தனர்!. தமிழ்க் கட்சிகளுடன் தன்னை வசதியாக இணைத்துக் கொள்ளாமல் சுயேச்சையாக நின்று வெற்றி பெற்றதும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு அளித்து தன்னாலானவரையில் யாழ்நகரை விருத்தி செய்ததையும் தவிர, படுகொலை செய்யப்படும் அளவிற்கு அப்படி அவரது பாரதூரமான துரோகங்கள் என்னென்ன? என்று ஒருவரும் கேட்கவில்லை, கும்பிடும் நேரமா அவரைக் கொலை செய்ய வேண்டும்? என ஒருவரும் ஆட்சேபிக்கவில்லை கிறிஸ்தவரான அவர் வழிபடும் இந்தக் கோயில் சன்னிதியையா கொலைக்களமாக்கியிருக்க வேண்டும்? என ஒருவரும் பிரபாகரனைக் கண்டனம் செய்யவில்லை. அதனைத் தொடர்ந்து எத்தனையெத்தனையோ படுகொலைகள் நிறைவேற்றப்பட்டன என்பதும், தமிழ்மண் இரத்தக் களறியாக் கப்பட்டது என்பதும் நாம் பார்த்த, அனுபவித்த நிஜம்!

இனி கேள்விக்கு வருவோம் :- இதில் விந்தை ஒன்று உண்டு.- பிரபாகரனின் அராஜகத்தில் யாழில் எத்தனையோ அக்கிரமங்கள் நடந்திருக்கினறன. முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர் றொபேட் சுபத்திரன், யாழ் மேயர்களாகப் பணியாற்றிய சரோஜினி யோகேஸ்வரன், பொ. சிவபாலன் மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராஜா எனப் பல படுகொலைகள் நடந்தேறியிருக்கின்றன. எரியூட்டப்பட்ட யாழ் நூலகம் புனரமைக்கப்பட்டு அதனைப் பொதுமக்களின் உபயோகத்திற்காக யாழ் மேயர் செல்லன் கந்தையா திறக்க முற்பட்டபோது, அந்த முயற்சி தடுத்து நிறத்தப்பட்டது. ஆனாலும், அந்த அராஜகத்தின் மத்தியிலும், போரினால் பாழ்பட்டிருந்த அந்த விளையாட்டரங்கம் துரோகியாக முத்திரை குத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட துரையப்பா அவர்களின் பெயருடனேயே தொடர்ந்தும் நீடித்தது. இவ்வளவு செய்த பிரபாகரன் அந்தப் பெயரை ஏன் நீக்கவில்லை? அல்லது நீக்க முடியவில்லையா? என நான் அந்த விளையாட்டரங்கத்தைப் பார்க்கும் போதெல்லாம் எண்ணியதுண்டு. அதையிட்டு ஆச்சரியப்பட்டதுமுண்டு.

பாருங்கள்! மேலும் முரண்நகையாக, இப்பொழுது அந்த விளையாட்டரங்கம் புனரமைக்கப்பட்டு, துரையப்பா என்ற பெயரிலேயே விளங்குகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேனா திறந்து வைக்கிறார். "உலகிலேயே மூன்றாவது பலம் வாய்ந்த படையைக் கொண்டுள்ள இந்தியாவின் அமைதிப்படைகளையே வெற்றி கொண்ட தீரன்" எனத் தலையில் தூக்கிக் கொண்டாடப்பட்ட பிரபாகரனால் எதிரியாகக் கருதப்பட்ட இந்தியாவின் பிரதம மந்திரி நரேந்திர மோடி காணொளி மூலம் திறந்து வைக்கிறார். அந்த வைபவத்தில் யாழ் பாடசாலை மாணவ மாணவிகள் திரளாகச் சென்று கலந்து கொள்கின்றனர். துரையப்பாவைத் "துரோகி" என்று கொன்ற பிரபாகரன் முள்ளிவாய்க்காலில் எங்கோ ஒரு மூலையில், அனாதரவான பிணமாக, பொய்யாய்ப் பழங்கதையாய்!.

"அரசியலில் தவறு இழைத்தோர்க்கு அறமே எமனாகும்" என்று தமிழ்க் காப்பியங்களில் ஒன்றான இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் கூறுவதன் நிருபணமா இது?. "அறம் சாராத எந்த அரசியலும் வெல்வது போல் சில காலம் இருக்கும் என்றாலும், இறுதியில் அது அழிவுக்கே இட்டுச் செல்லும்" என்பதன் உண்மையை இது கோடிட்டுக் காட்டுகிறதோ?.


"தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் தர்மம் மறுபடி வெல்லும்" என்று பாரதி, பாஞ்சாலி சபதத்தில் சொன்ன நியதி இதுதானோ?.

சரித்திரம் புகட்டும் இப் பாடங்களை இப்போது அரசோச்சும் அரசியல்வாதிகள் எண்ணிப் பார்க்க வேண்டும்! உணர்ச்சிகளுக்கு அடிமையாகி வழிதவறிப் போகும் மக்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!!.

*த.ஜெயரூபன் பருத்தித்துறை*

**கேள்வி: வடமாகாண முதலைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் புலமை தமிழ் மக்களின் விமோசனத்திற்குப் பயன்படுகிறதா?**

பதில்: அவர் தன்னை யாராகக் கருதிக் கொள்கிறார் என்றே தெரியவில்ல. குறிப்பாக தனது பாத்திரம் (Role) என்ன என்று தெரியாது, தானும் குழம்பியவராக மக்களையும் குழப்பியவராக அவரது பேச்சுக்களும் செயல்களும் இருக்கின்றன. தன்னை என்னவாக நினைத்துக் கொள்கிறார்? - ஒரு பிரசங்கியாகவா?, வாத்தியாராகவா?, உபதேசம் பண்ணுபவராகவா?, தமிழர்களுக்குக்



கிடைக்கப்பெற்ற ஒரே ஆபத்பாந்தவராகவா?, தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தன்னிகரில்லாத் தலைவராகவா?. நல்ல தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகளை அவ்வப்போது எழுதி வாசிக்கும் கெட்டிக்காரப் பள்ளி மாணவனாகவா?

சமீபத்தில் புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் தையல் நிலைய திறப்பு விழாவொன்றல் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசியதாக வெளிவந்த செய்தி:-

"வடமாகாண மக்களின் மனம் அறியாது நிலை அறியாது உறுப்பினர்கள் பலர் செயற்பட்டு வருகிறார்கள். செய்ய வேண்டிய வேலைகள் இருக்கும்போது சிறுபிள்ளைத்தனமான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அமைச்சர்களைப் பற்றி அவதூறுகளை எடுத்து விளம்பவே சபையைப் பாவிக்கப் பார்க்கின்றார்கள். பல நன்மைகளை எதிர்பார்த்து மக்கள் இருக்கின்றார்கள். அதற்காகப் பாடுபடாது எதிர்மறையான காரியங்களிலேயே சிலர் தம் காலத்தைக் கழிக்கின்றார்கள்" என வடமாகாண முதலைமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிது சிந்தித்துப் பார்ப்போமானால், இது அவரது தன்னைப் பற்றிய சரியான சுயவிமர்சனமும் எனக் கொள்ளலாம்.

அவரும், வடமாகாண மக்கள், தங்கள் வாழ்வாதாரங்கள் மேம்பட ஒரு புதிய தென்றலாக வழிகளை எடுப்பார் என்ற மன எண்ணத்தால் தான், - அரசியலில் புதிய அணுகுமுறைகளை மேற்கொண்டு தமது இன்னல்கள் நிறைந்த நிலைக்கு முடிவு கட்டுவார் என்ற எதிர்பார்ப்பில் தான் - அவரை முதலமைச்சராகத் தெரிவு செய்தார்கள் என்பதை அறியாதவர் போல் செயற்பட்டு வருகின்றார்.

அவரும், செய்ய வேண்டிய வேலைகள் இருக்கும்போது அரசியல் சாணக்கியமில்லாத, யதார்த்தங்களுக்குப் பொருந்தாத, சரியான அணுகுமுறைகளற்ற சிறுபிள்ளைத்தனமான பல பேச்சுக்களிலும், நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

அவரும், அரசாங்கத்தைத் திட்டவும், தனது கையாலாகத் தனத்தையும், ஆட்சி புரிவதற்கான அனுபவமின்மையையும், திறமையின்மையையும் மறைக்கவே, வடமாகாண சபையைப் பாவிக்கின்றார்.

அவரும், பல நன்மைகளை எதிர்பார்த்து இருக்கும் மக்களுக்கு, அவற்றிற்காகப் பாடுபடாது, ஒன்பது மாகாணங்களில் ஒரு மாகாணத்தின் முதலமைச்சர் என்ற கோதாவுக்கு அப்பால் பேசுவது, அறிக்கைகள் விடுவது போன்ற எதிர்மறையான காரியங்களிலேயே தன் காலத்தைக் கழிக்கின்றார்.

முதலமைச்சராக அவரிடம் அரசியல் அதிகாரம் இருக்கிறது மக்கள் ஆதரவு இருக்கிறது. ஆளணி இருக்கிறது. அரசாங்கத்திடமிருந்து நிதி கிடைக்கிறது. - அவற்றைச் சரிவரப் பிரயோகித்து வடமாகாணசபை உறுப்பினர்களை பொறுப்புடனும், நேர்மையுடனும் செயற்படச் செய்து, மக்களுக்கு நன்மைகள் பயக்கும் வகையில் நிலைமைகளைச் சீர்செய்து திறம்பட நிர்வகிக்காது ஒரு சாதாரண மனிதன் போல் புலம்புகிறாரே!. இதற்காகவா இவருக்கு முதலைமைச்சர் பதவி?

சி.வி.விக்னேஸ்வரன் தன்னையும் குழப்பிக் கொண்டு மற்றவர்களையும் குழப்பிக் கொண்டிருக்கிறார். இருளைச் சபித்துக் கொண்டிருக்கிறாரே தவிர மெழுகு வர்த்திகளை ஏற்றாது அநியாயமாகக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார்! தட்டிக் கேட்பதற்கும், தடம் புரளாது செயற்பட வைக்கவும் வக்கில்லாத மக்களைக் கொண்ட தமிழ்ச் சமுதாயம் எனது சமுதாயம்!! .

## பாதுகாப்புக்கு அவசியமான நிலங்கள் ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

**காயினும் அர்த்தமிருக்கலாம். அவ்வாறு நடக்குமா? நடக்காதா? என்ற கேள்விக்கான விடையைக் காண்பது வேறொரு விடயம். எனினும், அதற்கான சர்வதேச அழுத்தம் தொடர்ந்து இருப்பதோடு, அதற்கான அழுத்தம் உள்நாட்டு தேசிய அரசியலிலும் கணிசமாக உள்ளது. மேலும், உள்நாட்டு பொருளாதார விருத்திக்கும் அவ்வாறானதொரு அவசியம் உள்ளது. அது ஒரு புறமிருக்க,**

**யாழ்ப்பாணத்தில் ஜூன் மாதம் 25 ஆம் திகதி இராணுவத்தினரிடமிருந்து 201 ஏக்கர் காணிகளை விடுவித்து உரிய மக்களுக்கு மீளக் கையளிக்கும் போது அரசின் பாதுகாப்புச் செயலாளர், இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பொது மக்களின் காணிகளில் பாதுகாப்பு காரணங்களுக்கு அவசியமான காணிகளைத் தவிர ஏனையவை உரிய பொதுமக்களிடம் 2018 ஆம் ஆண்டுக்குள் முழுமையாக மீளக் ைகயளிக்கப்படும் என அறிவித்தார். பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டில் சுமார் 23000 ஏக்கர் தனியார் காணிகள் இருந்ததாகவும். இப்போது குடாநாட்டில் படையினர் வசம் 3000 ஏக்கர் தனியார் காணிகள் இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். இதற்கிடையில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மாநாட்டுக்குச் சென்ற வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர அவர்கள், படையினர் வசம் மொத்தமாகத் தற்போது 4000 ஏக்கர் தனியார் காணிகள் இருப்பதாகவும் அவை அனைத்தும் 2018 ஆம் ஆண்டுக்குள் உரிய சொந்தக்காரார்களிடம் மீளக் கையளிக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.**

**அமைச்சர் படையினர் வசம் இன்னமும் உள்ள தனியார் காணிகள் அனைத்தும் உரிய சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்படும் என்கிறார். பாதுகாப்புச் செயலாளரோ! பாதுகாப்புக்கு அவசியமெனக் கருதப்படுகின்ற காணிகள் மீள ஒப்படைக்கப்படமாட்டா என்கிறார். இதேவேளை, பாதுகாப்புக் காரணங்களுக்காக எவ்வளவு தமிழர்களின் காணிகளை அரச படையினர் தம்வசம் வைத்திருக்கப் போகிறார்கள் என்பதை பாதுகாப்பு அமைச்சர் இன்னமும் எந்த இடத்திலும் தெளிவுபடுத்தவில்லை.**

**இதற்கிடையில், மேலும் 1500 ஏக்கர் காணிகளை உரிய தனியாரிடம் மீள ஒப்படைப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதன் அமைச்சரவையின் அனுமதியைக் கேட்டுள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன. அப்படியானால், மிகுதி 2500 ஏக்கர் காணிகளும் முழுமையாக படிப்படியாக மக்களுக்கு மீளக்கையளிக்கப்படுவதற்கான அனுமதியையும் அமைச்சரவை மேற்கொள்ளுமா? அல்லது அந்த நிலங்கள்தான் பாதுகாப்பு செயலாளர் குறிப்பிடும் "பாதுகாப்புக்கு அவசியமான" காணிகளா? அந்தக் காணிகள் எந்தப் பகுதிகளைச் சேர்ந்த காணிகள்? இந்தக் கேள்விகளுக்கு விடை தெரியாமல் தங்களிற் பலருக்கு நிரந்தரமாக அகதி முகாம் வாழ்க்கைதானா என விழி பிதுங்கி நிற்கிறார்கள் இன்னமும் அகதி முகாம்களையே வாழ்க்கையாகக் கொண்ட தமிழர்கள். அரசாங்கத்தோடு நெருக்கமாக இணங்கிச் சமரச அரசியல் நடத்திக் கொண்டிருக்கிற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமிழர்களின் காணிகளை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதை விட்டு விட்டு, "தமிழர்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லையென்றால் போராட்டம் வெடிக்கும், என போர் முரசு முழங்குகின்றார். இது அகதி முகாம் வாழ்க்கையிலிருந்து எப்போது விடுதலை கிடைக்குமென ஏங்கி நிற்கும் மக்களின் கொஞ்ச நஞ்ச நம்பிக்கைகளையும் வெடித்துச் சிதற வைப்பதாகவே உள்ளது.**



தோழர் தேவகுமார்
நற்பிட்டிமுனை

### தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
### ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்
## தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை
# நினைவு கூருவோம்

**போராட்டத்தில் உயிர்நீத்த அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்**




தோழர் இமாம்
சாவகச்சேரி

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| மு. கிருபானந்தம் | இமாம் | 07.07.1986 | சாவகச்சேரி |
| ஜே.வில்பேட் மோகன்ராஜ் | அசோக் | 07.07.1986 | இளவாலை |
| ஈஸ்வரன் | எட்வேட் | 07.07.1986 | கோப்பாய் |
| அகிலன் | செண்பகம் | 07.07.1986 | உரும்பிராய் |
| பரமநாதன் | சுகிர்தன் | 07.07.1986 | கல்வியங்காடு |
| சிவலிங்கம் யோகராஜா | குமார் | 18.07.1989 | கிளிநொச்சி |
| செல்வேந்திரன் | தங்கண்ணா | 28.07.1989 | தொண்டமனாறு |
| வி.பாஸ்கரன் | | 27.07.1983 | நற்பிட்டிமுனை |
| தேவகுமார் | | 27.07.1983 | நற்பிட்டிமுனை |
| எஸ்.சாந்தரூபன் | சனந்தன் | 09.07.1985 | பெரியகல்லாறு |
| எம்.திருச்செல்வம் | ஞானம் | 07.07.1986 | கல்முனை |
| ரி.ஜீவகாருண்யம் | தம்பிஐயா | 23.07.1987 | சித்தாண்டி |
| கே.மகேந்திரன் | வேணு | 13.07.1988 | மகிளூர் |
| சின்னத்துரை | துரை | 20.07.1989 | மண்டூர் |
| எம். ஈ. மக்பூர் | தைரி | 31.07.1987 | ஏறாவூர் |
| விமலேந்திரன் | நாகராசா | 1986.07.07 | திருகோணமலை |
| ரூபிகா | | 1986.07.13 | ஓமந்தை |
| ஜெயந்தி | | 1986.07.13 | சாஸ்திரிகூளாங்குளம் |




தோழர் பாஸ்கரன்
நற்பிட்டிமுனை



தோழர் ஞானம்
கல்முனை

கும்பகோணத்தில் 20.06.2016 அன்று ஸ்ராலின் அண்ணனின் உருவப்பட திறப்பு விழாவில் கலந்துகொண்டு தோழர் சுகு ஆற்றிய உரையின் தொகுப்பு.

# ஈழ மக்கள் வரலாற்றில் அண்ணன் ஸ்ராலின்





எமது தேசிய, சமூக மாற்ற இயக்கம் தொடர்பில் ஸ்டாலின் அண்ணன் ஆழமான தொலைநோக்கு பார்வையைக் கொண்டிருந்தார்.

பகுத்தறிவு இயக்கத்தின் வாரிசான அவர் பொதுவுடைமைத் தத்துவத்தில் ஈடுபாடு கொண்ட சர்வதேசியவாதி.

திராவிட இயக்கத்தின் வேர்களின் வாசனையை எம்மீது படரவிட்டவர். அந்த இயக்கத்தைச் சேர்ந்த சமூக மறுமலர்ச்சி மற்றும் சமூக மாற்ற சக்திகளை எமக்கு அடையாளம் காட்டியவர். காலஞ்சென்ற தோழர் வள்ளிநாயகம் தோழர் நாபா விற்கு அவரை அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும்.

கும்பகோணம் ஒரு வரலாற்று நகரம். 1981 இல் கும்பகோணத்தில் உள்ள பெரியார் மண்டபம் ஒன்றில் எமது அமைப்பாளர் மாநாடு நிகழ்ந்தது. இந்த மாநாட்டிற்கான அனுசரணையை ஸ்டாலின் அண்ணன் வழங்கினார்.

எமது இருப்பிடம், பாதுகாப்பு, உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகள் அனைத்துமே ஸ்டாலின் அண்ணையால் பூர்த்தி செய்யப்பட்டன. அவர் அக்காலத்தில் எமக்களித்த பேராதரவு எமக்கு பெரும் ஆச்சரியத்தையும் மிகுந்த தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தி இருந்தன.

இந்தக் கும்பகோணத்தில் தான், 1983 ஐத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட பாசறைகள், பயிற்சிகள் எல்லாம் இங்குள்ள தோழர்கள் - மக்களின் பேராதரவுடனேயே நடாத்த முடிந்தது.

தோழர் வள்ளி நாயகம் - தோழர் ஓவியா போன்றவர்கள் அதில் பேருதவி புரிந்திருக்கிறார்கள்.

அவர் எமக்கு உதவுவதில் அவரின் துணைவியார் (அண்ணி), ஸ்ராலின் அண்ணாவின் தாயார் உற்ற சுற்றத்தவர்கள், தோழர்கள், நண்பர்கள், ஊரவர்கள், தஞ்சையின் சுற்றயல் கிராமங்களில் இருந்தவர்களின் பங்களிப்பு குறிப்பிடத் தகுந்தது.

பெருமை மிகு தந்தை பெரியாரின் பாரம்பரியத்தில் நின்று அவர்கள் எமக்கு உதவினார்கள்.

மிகப் பிரமாண்டமான தேவைகளை அவர்கள் நிறைவேற்றினார்கள் எந்த பிரதியுபகாரமும் பார்க்காமல் அவர்கள் உதவினார்கள்.

எமது வாழ்வில் மறக்கமுடியாத உணர்வு நிலையான உறவு, ஒரு உன்னதமான சரித்திர காலகட்டம்.

தேசிய விடுதலை மாத்திரமல்ல சமூக மாற்றம் - தீண்டாமைக்கெதிரான போராட்டம் - சர்வதேச சகோதரத்துவம் இவற்றுடன் ஐக்கியமானோம்.

சமூகப் பிரக்ஞை கொண்ட பகுத்தறிவு சார், பொதுவுடைமைசார் உலகத்தை நோக்கி இந்த உறவுகள் எம்மை உந்தித் தள்ளின.

இன்று புலம்பெயர் தளத்திலும் நாட்டிலும் குடந்தை நகரம் தெரியாத தோழர்கள் குறைவே. பலர் மறைந்து விட்டார்கள். ஆனால், வாழ்பவர்கள் இலட்சியம் சார்ந்த அந்த வசீகரமான உறவை நினைவில் வைத் திருக்கிறார்கள். இந்த நினைவுகள் காலத்தால் அழியாதவை.

1984ல் எமது கட்சியின் முதலாவது காங்கிரசும் கும்பகோணத்தில் தான் நிகழ்ந்தது. ஸ்டாலின் அண்ணாவின் காமராஜர்சாலை பேக்கரி, கோமளவல்லிப் பேட்டை, சிவபுரம் எல்லாமே எமக்குப் பரிச்சயமானவை.

சமூக அரசியல் போராட்டத்திற்கு அத்தனை அறவழிகளிலும் உதவியவர். தந்தை பெரியார், அம்பேத்கர் போன்ற மாபெரும் தலைவர்களை கற்பதற்கான தீவிர பிரக்ஞைப் பயணம் இங்கிருந்து தான் ஆரம்பித்தது.

ஸ்ராலின் அண்ணை போன்றவர்கள் சமூகத்தில் விதிவிலக்காகத்தான்- பொது விதி மீறலாகத்தான் தோன்றுவார்கள். நாம் ஸ்ராலின் அண்ணனுடன் பழகக் கிடைத்த காலத்தை எமது வாழ்க்கைக் காலத்தில் நிகழ்ந்த மிகப்பெருமிதமான உறவாகவே கருதுகிறோம். ஸ்ராலின் அண்ணையின் இதயத்தைப் புரிந்தவர்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள்.

அவரது வரலாறு பல்வேறுபட்டவர்களின் அனுபவங்களுடன் முழுமையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

யுத்த இறுதி நாட்களில் கிளஸ்ரர் குண்டுகள் விசப்பட்டதாக லண்டன் கார்டியன் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

முன்னர் சனல் 4 யுத்த இறுதி நாட்கள் பற்றிய செய்திகளை வெளியிட்டு வந்தது. தற்போது கார்டியனில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

செய்திகள் இவ்வாறு வந்து கொண்டிருக்கையில் இலங்கையில் என்ன நடைபெறுகிறது. போதாமைகள், முரண்பாடுகள், சர்ச்சைகள் இருப்பினும் பரணகம கமிசன் தனது வரையைறைக்குள் இயன்ற வரை விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக கூறுகிறது.

பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முக்கியமாக படையினரிடம் சரணடைந்தவர்களின் பட்டியலைக் கோரியிருந்தது. இந்த பட்டியல் வழங்கப்படாதது குறித்து தனது கண்டனத்தையும் வெளிப்படுத்தியிருந்து.

எது எப்படி இருப்பினும் யுத்தத்தின் இறுதி நாட்களில் நிகழ்ந்தவை தொடர்பான போதாமை காணப்படுகின்றமை வெளிப்படையான ஒரு விடயம்.

யுத்தம் முழுவதிலும் நடைபெற்றவை அனைத்தும் பற்றி இங்கு பேசப்படவில்லை. அது பேசப்படாமல் முழுப் பரிமாணத்தையும் அறியமுடியாது

தவிர, இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கான மக்கள் குழு நாடு முழுவதும் பரவலாக அபிப்பிராயங்களைத் திரட்டி, தொகுத்து தனது அபப்பிராயத்தையும் வெளியிட்டிருக்கின்றது.

# இலங்கையின் நல்லெதிர்காலத்திற்கான மூலோபாயம்!

நமிலனை அம்மான்

நாட்டை ஜனநாயகமயப்படுத்துவது அடிப்படை மனித உரிமைகள் தொடர்பில் அதன் அறிக்கையில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

நாடு ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டும் என்ற பரவலான அபிப்பிராயத்தை பிரதிபலித்திருக்கிறது.

ஆனாலும், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றங்கள் காணப்படவில்லை.

தமிழ் மக்களின் பரவலான எதிர்பார்க்கை ஐக்கிய இலங்கைக்குள் கூட்டாட்சியே

யுத்தத்தின் இறுதி நாட்களில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பிலும் முன்னேற்றங்கள் ஏற்படாத பட்சத்தில் நெருக்கடிகள் அதிகரிக்கும். விமோசனத்திற்கான பாதையில் இன்னும் அதிக தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிடத்தகுந்த முன்னேற்றங்களைக் காணமுடியவில்லை. சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்து பலவீனமடைந்து வருகின்றன. குறிப்பாக சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயிகளுக்கான மானியங்கள், அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அரசினால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை. சாதாரண மக்களின் வாழ்வு கடினமாகிக் கொண்டே போகின்றது. இந்நிலை அதி தீவிரவாத சக்திகளைப் பலப்படுத்துவதாகவே அமையும். இதனால் அராஜக நிலைமைகளை நோக்கியே நாடு இட்டுச் செல்லப்படும்.

நாட்டின் சமூக பொருளாதார நிலைமைகளை ஸ்திரப்படுத்துவதும்,

இளந்தலை முறையினரின் மனக்குறைகளை உணர்ந்து கொள்வதும் அவற்றுக்கு தீர்வு காண்பதுவும்,

இனப்பிரச்சனைக்கு இலங்கை பல்லினங்களின் நாடு என்ற அடிப்படையில் தீர்வு காணப்படுவதுவும்,

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக நிலைமைகளைப் பலப்படுத்துவதும்,

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதுவும், சமூக வாழ்வில் இராணுவ பிரசன்னத்தை தளர்த்துவதுவும்,

இன்றும் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தமது சொந்த நிலங்களுக்கு மீண்டும் சென்று வாழும் நிலைமைகளை ஏற்படுத்துவதுவும்,

மீனவர் பிரச்சனைக்கு இருதரப்பினரும் கலந்துரையாடுவதனூடாக சுமுகமாக தீர்வு காண்பதுவும்,

வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் விதத்தில் தொழில் துறைகளை நிறுவுவதும்,

மலையகத்தில் - மத்திய கிழக்கில் - ஆடைத்தொழிற்சாலைகளில் - கிராமப் புறங்களில் என அனைத்து தளங்களிலும் பெண்களுக்கான சமூக பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதுவும்,

பெண்கள் தலைமைதாங்கும் 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுவும்,

இலங்கை மக்களின் நலன்களுக்கும் இலங்கையின் தேசிய ஒற்றுமைக்கும் அவசியமானவைகளாகும்.

இந்த நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் நம்பிக்கையிழந்து - வெறுப்படைந்து நாட்டை விட்டு ஓடுகின்ற வகையாக உள்ள நிலைமைகளைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

இலங்கை நாலுபுறமும் கடல் சூழ ஒரு தீவாக இருப்பதனால் இன்றைய உலகில் தனித்து இயங்கி விடலாம் என்பது மடமைத்தனமாகும்.

இந்த பரந்துபட்ட உலகத்துடன் இணைந்திருப்பதற்கான ஏற்பாடுகள் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரவர்க்கத்தினருக்கு மாத்திரமல்ல மக்களுக்கும் வேண்டும்.

சமூக பொருளாதார அரசியல் தளங்களில் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் நிலை நிறுத்தாமல் இந்த நாட்டை ஆசியாவின் அதிசயமாக ஆக்கி விட முடியாது.

## வவுனியாவிலா? ஓமந்தையிலா? மாங்குளத்திலா? மதவாச்சியிலா?

# கயிறிழுவையில் பொருளாதார மையம்



ஜனாதிபதி மைத்திரி - பிரதமர் ரணில் தலைமையிலான புதிய அரசாங்கம் அதனது பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாக இலங்கையின் ஒவ்வொரு மாகாணங்களிலும் பொருளாதார மையங்களை உருவாக்குவதென முடிவு செய்தது. அதன்படி வடக்கு மாகாணத்துக்கான பொருளாதார மையத்தை உருவாக்குவதற்காக 200 கோடி ரூபாய்களையும் ஒதுக்கியுள்ளது. இப்போது அந்த மையத்தை வடக்கு மாகாணத்தின் எந்தப் பகுதியில் அமைப்பது என்பதில் இழுபறிகள் நிலவுகின்றன. இங்கு பொருளாதார மையம் என்பது தம்புள்ளையில் அமைந்திருப்பது போன்ற விவசாய உற்பத்திகளுக்கான பொருளாதார மையம்.

இவ்விடயத்தில் வடக்கு முதலமைச்சரும், மத்திய அரசின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுத்தீனும் இரு துருவங்களாக செயற்படுவது தெரிகின்றது. இவ்விடயத்தில் மத்திய அரசின் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துபவராக மத்திய அமைச்சர் ரிஷாத்தும், வடக்கின் அரசியற் சக்திகளின் பாத்தியில் செல்வாக்குச் செலுத்துபவராக முதலமைச்சரும் உள்ளனர்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் பரிந்துரைக்கு அமைய பொருளாதார மையத்தை வவுனியா நகருக்கு அண்மையிலுள்ள தாண்டிக்குளத்தில் அமையும் என்றே மத்திய அரசு தீர்மானித்தது. தொழில் உற்பத்தி மையங்கள் நகரங்களுக்கு அண்மையாக அமைவதே பொருத்தமானதென மத்திய அரசு சார்பில் அதற்கான காரணங்களும் கூறப்பட்டது. தாண்டிக் குளத்தில் உள்ள வவுனியா விவசாயக் கல்லூரியின் விவசாய பண்ணை நிலங்களை சுவீகரித்து பொருளாதார மையம் அமைப்பதென்பதே மத்திய அமைச்சரவையின் முடிவாக இருந்தது.

தாண்டிக்குளத்தில் பொருளாதார மையம் உருவாக்கப்பட்டால் வவுனியா விவசாயக் கல்லூரி பாதிக்கப்படும் எனவே மாங்குளத்திலோ அல்லது ஓமந்தையிலோ தான் அமைக்கப்பட வேண்டும் என தமிழர் பிரதிநிதிகளிற் பெரும்பாலோர் குரல் கொடுக்கின்றனர். இது தொடர்பாக, வடக்கு முதல்வர் மத்திய கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஹரிசனைச் சந்தித்துப் பேசியபோது, அமைச்சர் தாண்டிக்குளமும் சரியான தெரிவு அல்ல: எனவே, வவுனியா நகருக்கு அருகிலேயே ஓர் இடத்தை தெரிவு செய்து கூறுங்கள் என்று கேட்க, வடக்கு முதல்வர் வவுனியாவில் ஏ9 பாதையில் உள்ள பஸ் நிலையத்துக்கு பின்புறமாக உள்ள மதவுவைத்த குளத்தில் 5 ஏக்கர் காணியை அடையாளம் காட்டினார். ஆனால், அந்த அரச காணியை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஏற்கனவே வேறு ஒரு நிறுவனத்திற்கு வழங்கியிருப்பதை காரணம் காட்டி அந்த இடத்தில் அமைப்பதுவும் அமைச்சரினால் மறுக்கப்பட்டது.

மத்திய அமைச்சர்களுக்கும் மாகாண பிரதிநிதிகளுக்கும் இடையே உள்ள இழுபறி நிலையைக் காரணம் காட்டி இந்த பொருளாதார மையத்தை மதவாச்சிக்குக் கொண்டு செல்லும் முயற்சி நடைபெற்றதாகவும், மத்திய ஒருங்கிணைந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதனை தாம் அம்பலப்படுத்தியிருப்பதாகவும் வடக்கு முதலமைச்சர் பகிரங்கக் கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார். இது தொடர்பான விவாத இழுபறியின் போது இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுடன் பேசி ஒரு சுமூகமான முடிவு எடுக்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஓமந்தையிலேயே பொருளாதார மையம் அமைய வேண்டுமென வடக்கில் அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் நடைபெற ஆரம்பித்துள்ளன. உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் என இவை தொடரும் போல் தெரிகின்றது. இதற்கிடையில், இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் மனோ கணேசன், வடக்கில் எங்கு பொருளாதார மையம் அமைய வேண்டும் என்பதை வட மாகாண மக்கள் பிரதிநிதிகளே தீர்மானிக்க வேண்டும்; ஆனால், வடமாகாண மக்கள் பிரதிநிதிகளுக்கிடையே ஒருமித்த கருத்து நிலைப்பாடு இல்லாமையே இப்பிரச்சினைக்கு பிரதான காரணம், இதனையே வெளியார் பயன்படுத்திக் கொள்ள முனைகிறார்கள் எனக் கூறியுள்ளார். வடக்கு முதல்வர் வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஒழுங்காகப் பங்குபற்றாமையும், அத்துடன் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு இடங்களை இந்த பொருளாதார மையம் அமைப்பதற்கு அவர் தெரிவு செய்தமையுமே இந்த குழப்ப நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் என வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் குற்றம் சாட்டி வருகின்றனர். கடைசியாக இரா. சம்பந்தர் அவர்கள் இது தொடர்பான இறுதி முடிவை வடக்கு முதல்வரிடமே விட்டுள்ளதாக கூறுகிறார்.

மாங்குளமே வடக்கு மாகாணத்தின் மையப்பகுதியாகும். வடக்கின் அனைத்துப் பிரதான பகுதிகளுக்கும். குறிப்பாக, வன்னி மற்றும் கிளிநொச்சியின் பின்தங்கிய பகுதிகளை நோக்கி அபிவிருத்தி பரவுவதற்கும் மாங்குளத்தை மையமாகக் கொண்டு அரசியல் பொருளாதார கட்டமைப்புகள் கட்டியமைக்கப்படுவது அவசியமாகும். மாங்குளத்தில் வடக்கு மாகாணசபையின் செயலகத்தை அமைப்பது என போடப்பட்ட திட்டம் இப்போது தூசிபிடிக்கப் போடப்பட்டுவிட்டது போல் தெரிகின்றது. அதற்கான வேலைத் திட்டங்கள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தால், இப்போது விவாதத்தில் இருக்கும் விவசாய உற்பத்தி பொருளாதார மையமென்ன! வடக்கிற்கான ஒரு பெரிய தொழில் உற்பத்தி மையத்தையே அமைத்திருக்கலாம். புத்திமான் பலவான்! - தேர்தல் உத்திகளிற் கைதேர்ந்த தமிழ்த் தலைமைகள் இதுவரை சமூக நலன்களை மேம்படுத்துவதற்காக புத்தியுடன் செயற்பட்டதில்லை. இனியாயினும் செயற்படுவார்! பார்க்கலாம்.

# 26 ஆவது தியாகிகள் தினம்




சுவிற்சர்லாந்தில் 19.06.2016 அன்று மாலை தோழர் நிமல்ராஜ் இன் தலைமையில் தியாகிகள் தின வைபவம் நடைபெற்றது. போராட்டத்தில் பல்வேறு காலகட்டங்களில் கட்சியுடன் இணைந்து பணியாற்றிய தோழர்கள் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர். யாழ்மாவட்டத்தில் மக்கள் விடுதலைப்படையில் பிரதான பாத்திரம்வகித்தவரான தோழர் குமார் அவர்களின் சகோதரர் மிஸ்ரனும் அவரது துணைவியாரும் குத்துவிளக்கேற்றி தியாகிகள் தின நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். அவர்களை தொடர்ந்து தோழர் நிவாஸ் மற்றும் லலிதா ஆகியோர் குத்துவிளக்கேற்றினர். இதனைத் தொடர்ந்து மலர்அஞ்சலியும், கலந்து கொண்ட அனைவரதும் மௌன அஞ்சலியும் இடம்பெற்றது. தோழர் பெனான்டோ, தோழர் பாஸ்கரன், தோழர் சுதா, தோழர் கணேசலிங்கம், தோழர் அலெக்ஸ் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர். தோழர் பிரபா அமரர் பத்மநாபா பற்றி கவிதை படித்தார். தோழர் மகேந்திரம் ஈபிடிபி சார்பில் கலந்துகொண்டு உரையாற்றினார். இங்கு உரையாற்றிய தோழர் சுதா, எமது தோழர்கள் எந்த இலட்சியங்களுக்காக போராடி மடிந்தார்களோ அந்த இலட்சியங்ளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதே நாம் அவர்களுக்குச் செய்யும் உண்மையான, அர்த்தமுள்ள அஞ்சலியாகும் என்று தெரிவித்தார்.






பத்மநாபா மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் 26 ஆவது தியாகிகள் தினம் 19-06-2016 மாலை பிரான்ஸின் தலைநகர் பாரீஸில் அனுஷ்டிக்கப்பட்டது. இந் நிகழ்வு தோழர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மக்கள் அமைப்புக்கள், கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பினரும் கலந்து கொண்ட உணர்வுபூர்வமானதும் அர்த்தபூர்வமானதுமான நிகழ்வாக அமைந்தது.

ஜனநாயகத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் மரணித்த தோழர்கள், பொதுமக்கள், சக அமைப்புக்களைச் சார்ந்த போராளிகள் என அனைவருக்கும் அஞ்சலி செலுத்தி நிகழ்வு ஆரம்பமானது.

தோழர் கிருபன், தனது வரவேற்புரையில் கட்சியின் பெயர் மாற்றம் பற்றிக் குறிப்பிடுகையில் பெயர் மாற்றமானது கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை மாற்றிக்கொள்வதற்கானது எனக் கருதிவிட வேண்டாம் எனவும் மேலும் நடந்து முடிந்த காங்கிரஸிற்குப்பின் கள நிலமைகளுக்கு ஏற்ப கட்சி மேலும் ஒழுங்கமைக் கப்பட்டிருப்பதோடு இடதுசாரிகளோடும், முற்போக்கு சக்திகளுடனும் இணைந்து சமூக மாற்றத்திற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் எனவும் தெரிவித்தார். தொடர்ந்து தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் சார்பில் தேவதாஸ், ரெலோ பிரான்ஸ் பிரதிநிதி நித்தி, டான் தொலைக்காட்சி இயக்குனர் குகநாதன், புளொட் பிரான்ஸ் பிரதிநிதி ஜென்னி, சமூக செயற்பாட்டாளர் அந்தோனிப்பிள்ளை, சம உரிமை இயக்கத்தின் சார்பில் ரஜாகரன், முன்னிலை சோசலிச கட்சியின் பிரான்ஸ் பிரதிநிதி சந்தனா, சமூக செயற்பாட்டாளர் ஞானம், முன்னாள் தமிழ் மாணவர் பேரவை செயற்பாட்டாளர் பாலகிருஷ்ணன், கோவை நந்தன் (ஈ.பி.டி.பி) ஆகியோர் உரையாற்றினர். உரையாற்றிய பலரும் கட்சியின் பெயரில் உள்ள "தமிழர்" என்ற பதம் குறித்து விமர்சித்து கருத்துத் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இறுதியாக தோழர் ஜோதி (சோலையூரான்) தனது உரையில், கட்சியின் நடைமுறை செயற்பாடுகளை வைத்து கட்சியை மதிப்பிட வேண்டுமே தவிர கட்சியின் பெயரை மட்டும் வைத்து அதன் செயற்பாடுகளை மதிப்பிட வேண்டாம். எமது வரலாறு என்றும் மக்கள் நலனையும், சமூகமாற்றத்தையும் முன்நிறுத்தியதாகவே இருந்துள்ளது அது தொடரும் எனத் தெரிவித்தார். அத்துடன் சமுதாயத்தில் காணப்படும் பிற்போக்கான செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல்கொடுப்பதுடன் நின்றுவிடாமல் கட்சிக்குள் காணப்படும் பிற்போக்கான செயற்பாடுகளுக்கு எதிராகவும் குரல்கொடுப்போம், மாற்றங்களைக் கொண்டு வருவோம். எமது கட்சி சரியான பாதையில் பயணிக்க வேண்டும் என்ற அக்கறையோடு முன்வைக்கப்படும் விமர்சனங்களை வரவேற்கிறோம் எனவும் குறிப்பிட்டார். தோழர் ரணேஸ் அனைவருக்கும் நன்றி கூறினார்.




கனடாவின் ரொறன்ரோவில் 26 வது தியாகிகள் தின நிகழ்வு 19.06.2016 தோழர் ஜேம்ஸ் இன் தலைமையில் நடைபெற்றது. தியாகிகள் தின நிகழ்வினை பத்மநாபா மக்கள் முன்னணியினர் ஒழுங்கு செய்திருந்தனர். ஆரம்பத்தில் மக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த அனைத்துப் போராளிகளுக்கும் பொது மக்களுக்கும் ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தி நிகழ்வுகள் ஆரம்பமானது. இந் நிகழ்வில் ரெலோ, புளொட், ஈபிடிபி, ஈரோஸ், ஈபிஆர் எல்எவ் (சுரேஸ் அணி) கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயற்பாட்டாளர்கள், சம உரிமை இயக்கம், பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர். தோழர் ஈழமணி, தோழர் நேசன் (சம உரிமை இயக்கம்), ஆதவன், தோழர் மகேஸ் (ஈபிடிபி), முருகன் (வாத்தி -ரெலோ), தோழர் மித்திரன் (ஈபிடிபி), ஜோர்ஜ் (தாயகம்) தோழர் செழியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். தோழர் பிரதாப் நன்றியுரையாற்றினார்.

தோழர் ஜேம்ஸ் தனது உரையில் ஸ்ராலின் அண்ணன், தோழர் நாபா இருவரும் தாம் பிறந்த நாட்டிற்கு அப்பால் ஏனைய நாடுகளின் விடுதலை பற்றியும் சிந்தித்தவர்கள் செயற்பட்டவர்கள். இவர்கள் இருவரும் சாராம்சத்தில் சர்வதேசியவாதிகளாக தமது போராட்ட வாழ்வை கொண்டிருந்தவர்கள் என்றார். ஈரோஸ், ஈபிஆர்எல்எவ், பத்மநாபா ஈபிஆர்எல்எவ் ஆகிய அமைப்புக்களின் தொடர்ச்சியாகவே இன்று தமிழர் சமூக ஜனநாயக கட்சி பரிணாமம் பெற்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

எல்லோருடைய பேச்சிலும் போராட்டத்திற்கு தம்மை அர்ப்பணித்த பொது மக்கள், போராளிகளை மரியாதை செலுத்தும் ஒரு தினம் அவசியம் என்ற பொதுக் கருத்து இருப்பதை அவதானிக்க முடிந்தது. மேலும் தோழர் நாபா எளிமையான மனித நேயம் மிக்க மரியாதைக்குரிய தலைவர் என்பதுவும் பொதுக் கருப்பொருளாக இருந்தது. மேலும் ஐக்கியமான செயற்பாடும் புலிகளின் தவறுகள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியன அல்ல என்ற கருத்துப் போக்குகளும் எல்லோரின் பேச்சிலும் பொதுப் பொருளாக அமைந்திருந்தன.




ஐக்கிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (UCPI) தோழர்கள் எமது தோழர்களுடன் இணைந்து நடாத்திய தியாகிகள் தினம் சென்னையில் UCPI தோழர் சங்கர் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்வில் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் (SDPT) தலைவர் தோழர் சுகு (சிறீதரன்) கலந்துகொண்டு உரையாற்றினார்.






சென்னை, புழல் இலங்கை அகதிகள் முகாமில் எமது தோழர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்ட 26 ஆவது தியாகிகள் தின நிகழ்வுகள் தோழர் ஸ்ரனிஸ் தலைமையில் நடைபெற்றது. முகாமிலுள்ள அமரர் தோழர் பத்மநாபா ஞாபகார்த்த நூல் நிலையம் முன்பாக ஒன்றுகூடி தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் போராடி மரணித்த தோழர்கள் சக இயக்கப் போராளிகள், பொதுமக்கள் அனைவருக்கும் அஞ்சலி செலுத்தினர்.

# வடமாகாணத்திலேயே மதுபாவனை அதிகம்

## அதிகாரமிருந்தும் அதைத் தடுக்காமற் தூங்குது மாகாண சபை

பார்த்திபன்

இலங்கையில் வட மாகாண மக்கள் மத்திலேயே மது அருந்துதல் அதிகமாக உள்ளதாகவும், அதிலும் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே மிகவும் அதிகமாக உள்ளதாகவும் தகவல் வெளியீடுகள் தெரிவிக்கின்றன. பொதுவாக நகர கூலித் தொழிலாளர்கள், விவசாய கூலித் தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழில் மற்றும் போக்குவரத்து சேவையிலுள்ள தொழிலாளர்கள் போன்றோர் மத்தியில் பொதுவாக மது அருந்தும் பழக்கம் பரவலாக இருப்பதை இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் காணலாம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில், இங்கு அதற்கும் மேலாக வேலையற்ற இளைஞர்கள், வெளிநாடுகளுக்குப் போகும் கனவுகளுடன் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இளைஞர்கள் ஆகியோர் மத்தியில் மது பாவனை அதிகளவாக இருப்பதாக அறியப்படுகிறது. யுத்தத்துக்கு முந்திய காலத்து நிலைமைகளோடு ஒப்பீட்டால் தற்போது இங்கு பரவலாக ஆசிரியர்கள் மற்றும் ஏனைய வகையான அரசாங்க உத்தியோகத்தர்கள் மத்தியிலும் மதுபாவனை அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண நகரில் உள்ள மதுபான விற்பனைக் கடைகளின் எண்ணிக்கையைப் பார்த்தாலே எவ்வளவு தூரம் இங்கு மதுபான பாவனைகள் அதிகரித்திருக்கின்றன என்பதைக் காணலாம். யாழ்ப்பாண நகர வீதிகளில் தேனீர்க் கடைகள் மற்றும் சாப்பாட்டுக்கடைகள் போல வீதிக்கு நான்கு அல்லது ஐந்து கடைகள் என பரவிக் கிடக்கின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சிறிய நகரங்களிலும் மதுவகை விற்பனைகள் யாழ்ப்பாண நகரத்து நிலைமைக்கு எந்த வகையிலும் குறைந்தவையாக இல்லை.

எங்கும் மதுக் கடைகள், எங்கும் மது விற்பனைகள் என்பது ஒரு புறமும், வெளிநாடுகளிலுள்ள உறவினர்கள் நிதி உதவிகளினால் இளைஞர்களின் கைகளில் தாராளமாக பணப் புழக்கம் என்பது மற்றொரு புறமும், இங்குள்ள அரசியற் தலைவர்களோ, சமயத் தலைவர்களோ, சமூகப் பிரமுகர்களோ இளைஞர்கள் மத்தியில் பரவியிருக்கும் மதுப்பாவனைப் பழக்கத்துக்கு எதிராக உணர்வு பூர்வமான பிரச்சாரங்களை காத்திரமான வகையில் மேற்கொள்ளாமை என்பது இன்னொரு புறம். இவை மதுபாவனைப் பழக்கங்கள் மற்றும் ஏனைய போதைப் பொருட்களின் நுகர்வுகள் இங்கு அதிகரிப்பதற்கு காரணங்களிற் சில.


இந்தியாவிலிருந்து வடக்கு மாகாணத்திற்குள் போதைப்பொருட்கள் கடத்தப்படுவதில் தமிழினத்துக்கு எதிரான ஒரு சதி செயற்படுவதாக இங்கு ஓர் அரசியற் கோட்பாடு பிரபலமாக இருக்கிறது. இங்கே அதிகரித்துள்ள மது விற்பனைக் கடைகளின் இருப்பு தொடர்பாகவும், தமிழ் இளைஞர்களின் மத்தியில் மது நுகர்வு அதிகரித்திருப்பது தொடர்பாகவும் அதே அரசியற் கோட்பாட்டை பிரயோகிப்பது முறையானதா? அந்தக் கோட்பாட்டை பிரபல்யப் படுத்துவதோடு திருப்திப்படுவது சரியானதா? என்ற கேள்விகள் இங்கு எழுகின்றன.

யாழ்ப்பாண இளைஞர்களிடையே பல தவறான போக்குகள் காணப்படுகின்றன என்பது பற்றிய விவாதம் ஒருபுறமிருக்க, இங்கு குறிப்பிடத்தக்க அளவு கவர்ச்சிகரமான வருமானத்தைத் தரக்கூடிய வேலைவாய்ப்புக்களை வழங்கும் ஆற்றல் கொண்ட தொழிற்சாலைகளோ, சேவைத் துறை நிறுவனங்களோ தேவையான அளவு இல்லை. இதனால், உயர்கல்வியை நோக்கி இளைஞர்கள் ஈர்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக இருக்கின்றன. அத்துடன் அவர்கள் தம்மைத்தாமே ஒரு சீரான கட்டுப்பாடான வாழ்க்கை முறைக்கு ஆட்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயமான தேவைகளும் இங்கில்லை. யுத்தகால கட்டம் பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையிலான உறவுகளிலும், முதியோர் - இளையோர்களுக்கிடையிலான உறவுகளிலும் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன. அதிகாரம் கொண்ட உத்தியோகங்கள், கைநிறைய வருமானம் தரும் வேலைவாய்ப்புகள் இல்லாவிட்டால் இங்கு படித்தோருக்கு சமூக முக்கியத்துவம் எதுவுமில்லையென்ற நிலைமையே உள்ளது.

அதேவேளை, வெளிநாட்டுக்கு சென்று வாழும் ஒருவன் இங்கு ஊர் பார்த்துப் போக வந்தாலும் அவனுக்கு அவனது வீட்டிலும், உற்றார் உறவினர் மத்தியிலும் சமூகப் பெரியவர்களின் மத்தியிலும் மதிப்பும் மரியாதையும் பெரியளவில் கிடைக்கிறது. அப்படி வருபவர்களால் விசுக்கி எறிந்து செலவளிக்க முடிகிறது. அவர்களின் உறவினர்கள் மற்றும் உற்றாருக்கென நன்கொடைப் பொருட்களுடனே வந்திறங்கி விநியோகம் செய்கையில் அவர்களிடம் ஒரு பணவசதி படைத்த தோரணை தொனிக்கிறது. அத்துடன் அவர்களிற் பெரும்பாலானோர் தமது வெளிநாட்டு வாழ்க்கையில் சர்வசாதாரணமாகவே மது அருந்தும் பழக்கத்தை கொண்டிருக்கின்றனர். அதனால் விருந்துகளும் தாராளம். இவ்வாறானவைகள் தான் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற இளைஞர்கள் மத்தியில், எப்பாடுபட்டாயினும் வெளிநாடு சென்றுவிட வேண்டும் என்ற இலட்சியத்தை தூண்டுகின்றன.

வெளிநாடு சென்று விடவேண்டும் என இளைஞர்களின் மத்தியில் நிலவும் ஆசைக்கும் உயர்படிப்புகளை நாட வேண்டும் என்ற தேவைக்குமிடையில் எந்தவித நேர் தொடர்புமில்லை. உயர் தரப் பரீட்சையில் நல்ல சித்தி பெற்று பல்கலைக் கழக அனுமதி கிடைப்போர் இங்கே பட்டப் படிப்பு பெறுகிறார்கள் எனினும் ஏனையோர் வேறு வகையான உயர்தொழில் நுட்பக் கல்வியைப் பெறுவதற்கு தயாராக இல்லாமையே இங்கு அதிகம், தமது தாயக மண்ணில் உழைத்து வாழ வேண்டும் என உறுதியான எண்ணங்கள் இல்லாது வெளிநாடு செல்வதையே குறிக்கோளாகக் கொண்ட இளைஞர்களுக்கு தாம் வாழுகின்ற சமூகத்தின் மதிப்புகள் விழுமியங்கள் பற்றிய கவலை ஏற்படமாட்டா.

இவ்வாறான அகப்புறக் காரணிகளின் செல்வாக்குக்கு இம்மண்ணின் இளைய தலைமுறை ஆட்பட்டிருக்கும் நிலையில் அவர்களை சரியான சிந்தனைகளையும் முறையான நடத்தைகளையும் நோக்கி வழிநடத்துவதில் இங்குள்ள அரசியல் சமூகத் தலைமைகள் பொறுப்பற்ற தனமாகவே நடந்து கொள்கின்றன என்பது கவனத்திற்குரிய விடயமாகும். பெரும்பாலான இளைஞர்கள் மதுபானத்துக்கு அடிமையாகிவிட்டார்கள் என பத்திரிகைகளில் கட்டுரை கட்டுரையாக எழுதியும் மேடை மேடையாகப் பேசியும் இளைஞர்களை விமர்சனம் செய்கின்ற இந்த அரசியல் சமூகத் தலைமைகள் மதுவிற்பனைகளைத் தடை செய்வதற்கு, குறைந்த பட்சம் மது விற்பனைகளைக் குறைப்பதற்கு -மதுக் கடைகளைக் குறைப்பதற்கு- வேண்டிய நடவடிக்கைகளை இன்னமும் ஏன் மேற்கொள்ளவில்லை.




நன்றி: வரைபடம், சன்டே ரைம்ஸ்

அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டசபைக்கான தேர்தலின் போது மதுவிற்பனைத் தடை என்பது ஒரு பிரதானமான பிரச்சார விடயமாக இருந்தது. ஆட்சியைப் பிடித்த ஜெயலலிதா அவர்கள் படிப்படியாக மது விலக்கைக் கொண்டுவரும் தமது திட்டத்தை மீண்டும் ஆட்சிக்கு வந்த அதேநாளில் தொடக்கி வைத்தார்.

இலங்கை அரசியல் யாப்பின் 13வது திருத்தப்படி மது தொடர்பான அனைத்து அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கே உண்டு. அரசியல் யாப்பின் 9வது அட்டவணையில் உள்ள 1வது நிரலாகிய மாகாண சபைக்கான சட்டவாக்க மற்றும் நிறைவேற்றதிகார நிரலில் மது தொடர்பான அனைத்து அதிகாரங்களும் தரப்பட்டுள்ளன. இந் நிரலின் 23வது இலக்கத்தில் தரப் படுள்ள அதிகாரத்தின்படி மதுவை வைத்திருப்பது, எடுத்துச் செல்வது, கொள்வனவு செய்வது, விற்பனை செய்வது பற்றிய சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தும் மாகாண சபைக்கே வழங்கப்பட்டுள்ளது. மது தொடர்பான அனைத்து அரச வருமானங்களும் இந்த நிரலின் 36.3 மற்றும் 36.19ம் இலக்கங்களில் வழங்கப்படுள்ள அதிகாரங்களின் படி மாகாண சபைகளுக்கே உரியதாகும்.

அதன்படி வடக்கு மாகாண சபை மது விலக்குச் சட்டத்தை முற்றாக இங்கே அமுலுக்குக் கொண்டு வரலாம். மது வைத்திருப்பதை, மதுவை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எடுத்துச் செல்வதை, மதுவைக் கொள்வனவு செய்வதை, அதனை விற்பனை செய்வதை ஒரு சட்டத்தின் மூலம் முற்றாக சட்டவிரோதமானதாக்கலாம், குறைந்த பட்சம் அவற்றைக் குறைக்கலாம். மதுக் கடைகள் தொடர்பான மேலதிக கட்டுப்பாடுகளை சட்டபூர்வமாகக் கொண்டு வந்து அவற்றைக் கணிசமாக குறைக்கலாம்; அவை கடைகளில் விற்கப்படும் நேரங்களைக் கட்டுப்படுத்தி குறைக்கலாம்; அவை விற்கப்படக் கூடாத நாட்களை அதிகரிக்கலாம், இவ்வாறாக, இங்கு மதுப்பாவனையை மிகக் குறைந்த அளவாக ஆக்குவதற்குரிய வேலைகளையாயினும் மாகாண சபை சட்டபூர்வமாக ஆற்ற முடியும். மது தொடர்பான அதிகாரங்கள் இன்னும் மத்திய அரசிடமிருந்து பகிரப்படவில்லை என சாட்டுச் சொல்வது பொருத்தமானதல்ல. இப்போது ஜனாதிபதி மதுப்பாவனைக்கு எதிரான இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறார். இந்த நிலையில், மதுவை இல்லாதொழிக்க - குறைந்த பட்சம் கணிசமான அளவுக்கு குறைப்பதற்கு மாகாண சபை முன்முயற்சி எடுக்குமானால் அதனைத் தடை செய்யும் போக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து வருவதற்கான நிலைமை மிகக் குறைவு என்பதே இன்றைய அரசியல் நிலைமை.

வடக்கு மாகாணத்தில் மதுவிலக்குக்கான இயக்கம் உருவாகுமானால் அது தேசிய ரீதியில் அனைத்து இன மக்களதும் வரவேற்பைப் பெறும். வடக்கு மாகாண சமூக மற்றும் சமயத் தலைவர்களும் சமூக உணர்வு கொண்ட அரசியற் தலைவர்களும் இதற்கான இயக்கத்தை வலுவாக முன்னெடுக்க வேண்டும். வடக்கு மாகாணம் இலங்கைக்கு முன்னுதாரணமாக உரிய சட்டங்களை விரைந்து நிறைவேற்ற வேண்டும். இதற்கு எதிராக சாராய வியாபாரிகள் பெரும் லஞ்சத் தொகைகளை அள்ளி இறைத்து அதிகாரத்திலுள்ள சில அமைச்சர்களை, அதிகாரிகளை விலைக்கு வாங்க முற்படுவார்கள். அதையும் மீறி முற்போக்கான சமூக உணர்வு கொண்ட சக்திகள் மதுவிலக்குக்கான, குறைந்தபட்சம் மது விற்பனைகளைக் கணிசமான அளவு குறைப்பதற்கான காத்திரமான இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும்.

தி. சிறிதரன் 294. கண்டி வீதி, யாழ்ப்பாணம். அவர்களால் இல 781, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் புதிய சங்கை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.